உயிர் மூச்சு;
விடுதலை விருட்சம்



பக்கம் 08

உதயன்

பக்கங்கள்
யாழ். - 30/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 30 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 278 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 15, ஞாயிறு 31.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

# வவுனியாவில் நேற்றுத் திரண்டனர் மக்கள்

## காணாமற்போதலுக்கு எதிரான பேரணி பொலிஸாரால் தடுப்பு

வவுனியா, ஒகஸ்ட் 31

சர்வதேச காணாமற்போனோர் தினமான நேற்று வவுனியாவில் காணாமற் போதலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பெரும் போராட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டதுடன் காணாமற்போனோரை கண்டுபிடிக்கக் கோரியும் கோஷம் எழுப்பினர். காணாமற்போன தமது உறவுகளின் படங்களை தாங்கியவாறு உறவுகள் பலர் கண்ணீர் மல்க இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.



காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிராக நேற்று வவுனியாவில் பொதுக்கூட்டமும் மாபெரும் ஜனநாயகப் போராட்டமும் நடைபெற்றன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

பொதுக்கூட்டத்தின் நிறைவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக மனு ஒன்றைக் கையளிக்க வவுனியா மாவட்டச் செயலகம் நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டமாக செல்லக்கூடாது என்று பொலிஸார் பணித்ததால் தாம் தனித் தனியே சென்று அரச செயலகத்தில் மனுவைக் கையளிக்கின்றோம் என்று கூறிய போதும் பொலிஸார் அதற்கு அனுமதி

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சி குளத்தில் மூழ்கி மூன்று சிறுமிகள் பரிதாபச் சாவு

## செல்வாநகரில் நேற்று மாலை அவலம்
## இருவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

கிளிநொச்சி, ஒகஸ்ட் 31

கிளிநொச்சி செல்வாநகரில் உள்ள கந்தன்குளத்தில் குளிக்கச்சென்ற சிறுமிகள் மூவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இந்த அவலச் சம்பவம் இடம் பெற்றது.

கடும் வறட்சியான காலநிலை நிலவுவதால் கிணறுகளில் தண்ணீர் இல்லாததையடுத்து குளத்தில் குளிக்கச் சென்ற போதே இந்த அவலம் நேர்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்தால் நேற்று மாலை கிளிநொச்சி செல்வாநகர் சோகமயமானது.

உயிரிழந்த சிறுமிகளில் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த பாலசரவணபவன் நவதாரணி (வயது - 16), பாலசரவணபவன் தட்சாயினி (வயது - 08) ஆகிய இருவரும் ஒரே

❖ 21 ஆம் பக்கம் பார்க்க



உயிரிழந்த சிறுமி ஒருவரின் சடலத்துடன் கதறியழும் உறவினர்

## ராமேஸ்வரம் மீனவர்களின் பணி நிறுத்தம் இன்று முடிவுக்கு

இராமநாதபுரம்,ஓக 31

மூன்று அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்று வந்த இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் கைவிடப்படுகின்றது.

மீனவர்கள் நாளை முதல் கடலுக்குச் செல்வர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கத் தலைவர் எமரிட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் நாகை உள்ளிட்ட மீனவர்களின் 63 விசைப் படகுகளை விடுவிக்கவேண்டும், பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடி உரிமையை பெற்றுத்தரவேண்டும், இலங்கைக் கடற்படையால் சேதப்படுத்தப்பட்ட படகுகளுக்கு அரசு நிவாரணம் வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திக் கடந்த கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 38 நாள்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் தங்களது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு நாளை தொடக்கம்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## உருவாகிறது புதிய கலாசாரம்



வலி.வடக்கு , ஓக. 31

ஆவணி விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை கீரிமலைக் கடலில் விநாயகர் சிலை முதல் தடவையாக கரைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் கிழக்கு சபரி மலை ஐயப்பன் ஆலயத்தில் இருந்து நேற்று முற்பகல் 10 மணியளவில் புறப்பட்ட இந்த விநாயகர் சிலை வாகனத்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

# டில்லியின் கொள்கையில் ஏற்படவேண்டும் மாற்றம்

## இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சுஷ்மாவிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் புதுடில்லியின் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் நேரடியாக எடுத்துக் கூறப்பட்டதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் 'உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தியாவில் புதிதாகப் பதவியேற்ற நரேந்திர மோடி தலை

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. ஆணையாளருடன் ஒத்துழைத்துச் செயற்படுக

### இலங்கையிடம் ஐ.நா. செயற்குழு வலியுறுத்து

கொழும்பு, ஓக.31

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருடனும், விசேட அறிக்கையாளர்களுடனும் ஒத்துழைக்குமாறு இலங்கையை கேட்டுக் கொண்டுள்ள பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நாவின் செயற்குழு, இந்த விடயத்தில் அவசியமான சகல உதவிகளையும் வழங்குமாறும்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## இந்து ஆலயங்களில் மிருகபலியை நிறுத்தக் கோரி இன்று போராட்டம்

### கைதடிச் சந்தியில் காலை 6 மணி முதல்

யாழ்ப்பாணம், ஓக. 31

இந்து ஆலயங்களில் நடத்தப்படும் மிருகபலியை நிறுத்தக்கோரி 12 மணி நேர உண்ணாவிரதப்போராட்டம் மற்றும் மிருகபலிக்கு எதிரான சட்டத்தைக் கொண்டுவரவேண்டி கையெழுத்து வேட்டை என்பன இன்று கைதடியில் நடைபெறவுள்ளன. தென்மராட்சி அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் நடை

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாபெரும் சைவ மாநாடு சிட்னி முருகன் ஆலயத்தில்



யாழ்ப்பாணம், ஓக. 31
உலகளாவிய ரீதியில் உள்ள இந்துக்களை ஒன்றிணைக்கவும் சைவ சமயத்தின் வளர்ச்சிக்காவும் மாபெரும் சைவ மாநாடு நேற்று ஆஸ்திரேலியாவின் சிட்னி முருகன் ஆலயத்தில் ஆரம்பமானது.

சிட்னி முருகன் ஆலயத்தின் சைவ மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று ஆரம்பமான இந்த மாநாடு தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் சைவ அறிஞர்களும், பேராசிரியர்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நல்லைஆதினமுதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் மா.வேதநாதன், கலாநிதி நவரத்தினம், மற்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கொண்ட குழுவினர் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

3 தினங்களும் மாநாட்டின் போது தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறப்புரைகள் நிகழ்த்தப்படவுள்ளன.

இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மாநாட்டை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளனர். (த-14)

## கடும் காற்றுக் காரணமாக பனை முறிந்து வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ்ப்பாணத்தில் தற்போது வீசி வரும் கடும் காற்றுக் காரணமாக மாவை கலட்டிப் பகுதியில் பனையொன்று வீட்டின் மீது முறிந்து விழுந்துள்ளது. இதனால் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. பொதுமக்கள் எவருக்கும்காயம் ஏற்படவில்லை.

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாகக் கடும் காற்று வீசி வருகின்றது. இதனால் பயன்தரு வாழை மரங்கள் உள்ளிட்ட பல்வேறு மரங்களும் சாய்ந்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்றுக் காலை, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவை கலட்டியில் கோ. ராஜசேகரம் என்பவரது வீட்டின் மீது பனை மரம் முறிந்து விழுந்துள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்தில் கட்டிய வீட்டின் மீதே பனை மரம் விழுந்துள்ளது. இதனால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

களுவாஞ்சிகுடி, ஓக. 31
ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராகேணியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் ஹெரோயின் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இந்த நபரின் இடம் புலனாய்வுப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டபோது அவரிடமிருந்து 200 மில்லி கிராம் கொண்ட ஹெரோயின் பைக்கெற் கைப்பற்றப்பட்டதோடு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார். (த-32)

## தமிழ் கற்ற ராணுவத்தினர் 1600 பேருக்கு சான்றிதழ்



வலி.வடக்கு, ஓக. 31
யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரில் தமிழ் மொழியை கற்று தேர்ச்சி அடைந்த படை அதிகாரிகள் உட்பட சிப்பாய்கள் ஆயிரத்து 600 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறை தல் செவன விடுதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்புப் படையினரின் நடன நிகழ்வு மற்றும் கண்டிய நடன நிகழ்வுகளுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சான்றிதழ்களை மதத் தலைவர்களான இந்து சமயக் குரு ஜெகதீஸ்வரக் குருக்கள், கத்தோலிக்க குருவான அருட்திரு ஜேசுதாஸ் அடிகள், இஸ்லாமிய மதகுரு றிஸ்வின் மற்றும் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரெரா ஆகியோர் வழங்கினர். (த-86)

# இந்திய மீனவரைத் திருப்திப்படுத்தும் முயற்சிகளில் அந்நாட்டு அதிகாரிகள்

### மழுப்பலான பதில்களை வழங்குவதாக மன்னார் மீனவர் பிரதிநிதி குற்றச்சாட்டு

மன்னார், ஓக. 31
படகுகள் விடுவிப்பு, எல்லை தாண்டிய மீன்பிடி குறித்து இலங்கை - இந்திய மீனவர் பேச்சின்போது இலங்கை சார்பில் கலந்துகொண்ட அதிகாரிகளால் தீர்க்கமான முடிவுவழங்கப்பட்டபோதும் இந்திய அதிகாரிகள் மீனவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மழுப்பலான பதில்களை அறிக்கைகளாக வெளியிட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட கிராமிய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான பேச்சில் ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடித்தல், கைது செய்யப்பட்ட படகுகள் விடுவிப்பு உட்பட பல விடயங்கள் குறித்து சுமார் 3 மணி நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பேச்சுக்கு முன்னதாக இலங்கை சார்பில் கலந்துகொண்ட அதிகாரிகளிடம், படகுகள் விடுவிப்பு மற்றும் எல்லைதாண்டி மீன்பிடித்தல் போன்றவற்றுக்குத் தாம் ஒரு போதும் அனுமதி வழங்கமாட்டோம் என வடக்கு மீனவர்களால் எடுத்துக்கூறப்பட்ட நிலையில் இந்திய அதிகாரிகளின் கோரிக்கைக்கு இலங்கை அதிகாரிகள் அடியோடு மறுப்புத் தெரிவித்தனர்.

பொருத்தமற்ற கோரிக்கைகளுக்குக் கடற்றொழில் அமைச்சு சார்பில் சாதகமான பதில் உங்களுக்கு வழங்கப்படாது. ஒரு நாளேனும் எல்லை தாண்டி மீன்பிடிப்பதற்கோ, ஒப்பந்த அடிப்படையில் மீன் பிடிப்பதற்கோ அனுமதி வழங்கப்படாது. அத்துடன் படகுகளும் விடுவிப்பு செய்யப்படமாட்டாது என இலங்கை அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்திய அதிகாரிகள் குழு, பேச்சின் பின்னர் மீனவர்களுக்குத் திருப்தியான பதிலை வழங்குவதற்காகப் படகுகள் விடுவிப்பதற்கும், மீன் பிடிப்பதற்கான அனுமதி கோரியும் ஆலோசித்து வருவதாக அறிக்கைகளை விடுகின்றனர்.

அதிகாரிகளின் மழுப்பலான அறிக்கையை ஏற்றுக்கொள்ளாத இந்திய மீனவப் பிரதிநிதிகள் இலங்கை மீனவர் பிரதிநிதிகளுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தித் தமது கோரிக்கை தொடர்பில் பேச்சில் கலந்துகொண்ட அதிகாரிகளின் பதில் என்ன என்று கேட்கின்றனர்.


இந்தநிலையில் பேச்சில் கலந்துகொண்ட இலங்கை அதிகாரிகளை நாம் கேட்கும்போது, தீர்க்கமான பதில் தம்மால் வழங்கப்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட ரீதியில் எம்மால் முடிவெடுக்கமுடியாது. அவர்களின் பொருத்தமற்ற கோரிக்கைகளைப் பேச்சின் போதே மறுத்து விட்டோம் என்று கூறினார்கள்.


இந்த நிலையில் தமிழ்நாட்டில் மீனவர் அல்லாத பிரதிநிதிகள் மீனவர் விடயத்தில் தலையிட்டு மாற்றுக்கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் இருப்பதால் மீனவர் சமூகம் பெரும் பாதிப்பில் உள்ளதாகவும் அங்குள்ள மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேச்சில் சாதகமான பதில் இன்னும் எமக்கு வழங்கப்படவில்லை - என்றார். (த-14)

# காணாமற்போனோரைத் தேடி வவுனியாவில் திரண்டனர் மக்கள்







# வடக்கு மீனவர் பிரச்சினையை ஆராய்வதற்கு விரைவில் குழு

## மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் அமைக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக.31
வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் அவர்கள் சிலவகையான மீன்பிடிச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது ஏற்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வடமாகாண மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபை பொது நோக்கு மண்டபத்தில் மீன்பிடி அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற மீன்பிடி அமைப்புகளின் பிரதிநிதிகள், தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் மீன்பிடி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதற்குப் பதிலளித்த மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

இது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை அத்துடன் எமது கடல்வளத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புண்டு. எனவே இது தொடர்பில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் ஒவ்வொரு மாவட்டங்களையும் சேர்ந்த மீன்பிடி உதவிப்பணிப்பாளர்கள் ஐவரும், ஒவ்வொரு மாவட்டங்களையும் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் ஐவரும் மற்றும் நைற்றா, நாரா ஆகிய மீன்பிடி நிறுவனங்களை உள்ளடக்கிய பிரதிநிதிகளும் உள்வாங்கப்படவுள்ளனர். இந்தக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரைவாக ஆய்வு செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சிவயோகன், சுகிர்தன், அனந்தி சசிதரன் உட்பட பல அரசியல் பிரமுகர்களும் கடற்றொழில் நீரியல் வள அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த-109)

# யாழ். நகரச் சந்தைகளில் மருந்து விசிறிய பழங்கள்

யாழ்ப்பாணம், ஓக.31
கொட்டடி, குருநகர் மற்றும் யாழ். நகரச் சந்தைகளில் மருந்து விசிறப்பட்ட பழவகைகள் தொடர்ந்தும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மருந்து விசிறப்பட்டுப் பழுக்க வைக்கப்பட்ட பழ வகைகளை விற்பனை செய்தால் குறித்த வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றனர்.

அவ்வாறு விற்பனை செய்த சில வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள சந்தைகள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் விற்பனை செய்யப்படும் பழ வகைகள் மருந்து விசிறப்படாதவையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும் யாழ். நகரின் பல சந்தைகளில் அவை தொடர்ந்தும் விற்பனையில் உள்ளதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

எனவே இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரப் பகுதியினர் குறித்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# சுகாதாரப் பரிசோதகருக்கு கொள்ளையர் வாள்வெட்டு

## வட்டக்கச்சியில் நள்ளிரவு சம்பவம்

கிளிநொச்சி வட்டக்கச்சியில் கொள்ளையர்கள் குழு நடத்திய தாக்குதல்களால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரான இளம் குடும்பஸ்தரொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு வட்டக்கச்சி சிவிக் சென்ரரில் வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் நடத்திய வாள் வெட்டில் பொதுச் சுகாதார பரிசோதகரான செ.பிரதீபன் (வயது-35) என்பவர் படுகாயமடைந்தார்.

நள்ளிரவு 12 மணியளவில் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரை வாளால் வெட்டியதுடன் மோசமாகத் தாக்கியுமுள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்த அவரது குடும்பத்தவர்களும் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கொள்ளையர்கள் வீட்டுக்குள் புகுந்ததை அவதானித்த வீட்டுக்காரர் அவலக் குரல் எழுப்பியபோதே வாளால் வெட்டப்பட்டதுடன் மோசமான தாக்குதலுக்கும் இலக்காகினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டக்கச்சி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதே வேளை நேற்றுமுன்தினம் தருமபுரம் கட்டைக்காடு கிராமத்தில் பூப்புனித நீராட்டு விழாவில் இரு குழுக்களிடையே நடைபெற்ற மோதல்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாகத் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-18-426)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய 18 வயது இளைஞர் கைதானார்



வல்வெட்டித்துறைப் பகுதியில் 15 வயதுப் பாடசாலை மாணவி ஒருவரைக் காதலிப்பதாகக் கூறி கூட்டிச் சென்று குடும்பம் நடத்தியதாகக் கூறப்படும் 18 வயது இளைஞரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீண்டகாலமாக தலைமறைவாகி இருந்த அந்த இளைஞர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வீடொன்றில் பதுங்கியிருந்தவேளை கைது செய்யப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த மாதம் வல்வெட்டித்துறை காட்டுவளவைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமியொருவர் காணாமற் போயிருந்தார்.

இது தொடர்பில் பெற்றோரினால் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் வல்வெட்டித்துறை வேம்படி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைச் சந்தேகித்தனர். எனினும் அவர் நீண்டகாலமாகத் தலைமறைவாகி இருந்தார். இந்த நிலையில் குறித்த சந்தேக நபரைத் தேடி வல்வெட்டித்துறைப் பொலிஸார் வலை விரித்திருந்தனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுமி மருத்துவப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைதான சந்தேக நபர் மீது சிறுமியை கடத்திச் சென்று குடும்பம் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த-109)

# மோட்டார் சைக்கிள்கள் இரு இடங்களில் திருட்டு



யாழ்ப்பாணம், ஓக. 31
மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டமை தொடர்பில் இரண்டு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கோப்பாயில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்று திருடப் பட்டுள்ளது.

சங்கானையில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்று திருடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டு அவற்றை பாகங்களாக்கி விற்பனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் அவை திருடப்பட்டுள்ளன.

தவிர அரியாலையில் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

சுதுமலையில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது.

சுதுமலை அம்மன் கோயில் கதவை உடைத்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன-என்றார். (த-4)

3,6 மற்றும் 12 மாதத்தவணை காலப்பகுதியில் உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனப் புத்தகத்தைக் கொடுத்து உங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு
கலைதேவன 077 3 675 022
சுதன் 077 3 550 018
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

# தொண்டைமானாறு நீரேரி. ஊடாக சந்நிதிக்கு பாதை

## உற்சவத்தை ஒட்டி அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.31
செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தொண் டைமானாறு நீரேரியை ஊட றுத்து பாதை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வலி.கிழக்கு பிரதேச சபையின் நலன்புரிச் சங்கத்தால் இந்த மண் பாதை அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபை பணியாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் இந்தப் பாதை அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தற்காலிக மண்பாதை நாளை திங்கட்கிழமை மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

# குடாநாட்டு விவசாயிகளுக்கு மேலும் 500 புசல் விதைநெல்

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் மேலும் 500 புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கவுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து பி.ஜி.406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல்லை சங்கம் கொள்வனவு செய்துள்ளதாகப் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

ஏற்கனவே ஆயிரத்து 500 புசல் விதைநெல் கொள்வனவு செய்யப்பட்டு அவை சகல கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாகவும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கொள்வனவு செய்யப்பட்ட விதை நெல் தரமானது என்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர் அவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனை விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-17)

## மணமகள் தேவை

யாழ் இந்து (விஸ்வகுலம் பக்தர்) வண்ணார் பண்ணையில் பிறந்து வசிக்கும் 24-9-1985இல் பிறந்தவர் (12இல்) செவ். உத்தராடம் நட்சத்திரம் 4ம் பாதம் லக்கின பாவம் (44) 3 சுற்றுபாவம் (71) உடைய பிறவிச்சைவ போசனமுள்ள மணமகனுக்கு பெற்றோர் தகுந்த படித்த அழகான மணமகளை எதிர்பார்க்கின்றனர். கூடுதலாக சைவம் விரும்பத்தக்கது. சைவத்திற்கு மாறக் கூடிய மணமகளும் தொடர்பு கொள்ளலாம். விஸ்வகுலத்தில் (பத்தர், ஆசாரி) பெண்ணை எதிர்பாக்கின்றனர் மற்றவை பேசித்தீர்க்கலாம்.

தொலைபேசி - 0772718398

# சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான அலையில் பௌத்தர்

### புத்தரின் போதனைகளுக்குத் துரோகமிழைப்பு என்கிறார் ஐ.நா. செயலர்

கொழும்பு,ஓக். 31

இலங்கையில் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறித்து தான் அச்சமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் மியன்மாரிலும் பௌத்தர்கள் ஏனைய சமூகத்தவர்களுக்கு எதிரான அலையால் ஈர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் பாலியில் இடம்பெற்ற ஐ.நாவின் மனித நாகரிகத்திற்கான கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துவருவது குறித்து தான் அச்சமடைந் துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சகல சமூகத்தவர்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக அரசும் மதத்தலைவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையிலும் மியன்மாரிலும் பௌத்தர்கள் இழைக்கும் அநீதிகள் மூலமாக அவர்கள் புத்தரின் போதனைகளுக்கு துரோகமிழைக்கின்றனர்.

மதத்தின் பெயரால் இழைக்கப்படும் வன்முறைகள் மதத்தின் உண்மையான கொள்கைகளை வன்முறைக்குட்படுத்துபவையாகும். மியன்மாரில் அவர்களது செயற்பாடுகள் ஜனநாயகத்தை நோக்கிய அந்த நாட்டின் மாற்றத்தைப் பாதிக்கின்றது. ரகின் மாநிலத்தில் காணப்படும் முஸ்லிம்களின் பிரஜாவுரிமை தொடர்பான விடயத்திற்கு தீர்வு காணப்படுவது அவசியம்.

தீயநோக்கத்துடன் இடம்பெறும் சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வெறுப்பைப் தூண்டுதலுக்கு எதிராக மதத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். அவர்கள் மதங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த பாடுபடவேண்டும். வன்முறையை தூண்டியவர்கள் மற்றும் அதிலீடுபட்டவர்களுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலுக்கு எதிராக அவர்கள் குரல்கொடுக்க வேண்டும்.

ஈராக்கில் பொதுமக் கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினால் கொல்லப்படுவது குறித்தும் அவர் கடும் சீற்றமடைந்துள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி Dr. ராதா சுதாகர்

(Medical Officer in maternal and child health)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி Dr. ராதா சுதாகர் நேற்று முன்தினம் (29.08.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயர்-காமாட்சி அம்மா தம்பதியரின் மகளும், சுதாகரின் மனைவியும், சண்முகதாஸ் ஐயர்- சுசிலா தம்பதியரின் மருமகளும், சஞ்சய் ஹரியின் தாயும், காலஞ்சென்றவர்களான சுந்தரராஜன் ஐயர், பால நடராஜன் ஐயர் மற்றும் கமலா, ஹேமா, லோசனா, பிரபா ஆகியோரின் சகோதரியும், பாபு சங்கர் சர்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் ஊரெழுவில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (51569) (10)

தகவல்: S. சுதாகர்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி. தாவடியில் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

(51564) தொடர்பு : 077 255 0807

## கார் விற்பனைக்குண்டு

GExxxx MODEL 1998 NISSAN
POLSER SILVER COLOUR
நல்ல நிலையில் உள்ள கார் (51561)
விற்பனைக்கு உள்ளது
தொடர்புகளுக்கு: 0776547899

## உடனடி வேலைவாய்ப்பு டோஹா கட்டாரில்

✔ டோஹா - கட்டாரில் ஏராளமான வேலை வாய்ப்பு உண்டு.
✔ நேர்முகத்தேர்வு மிகவிரைவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில். குருநாகல் Prudential Group இனால் நடத்தப்படவுள்ளது.

ஓரளவு ஆங்கில அறிவுடன்
பாதுகாப்பு ஊழியர் - QR 1000-1700 (37,000-61200 ரூபா)
வளைகுடா சாரதி அனுமதி பத்திரம் உள்ளவர்களுக்கு
இலகு ரக வாகனச் சாரதி - QR 1400 - 1700
கன ரக வாகனச் சாரதி - QR 1800 - 3500
மண் அகழ்வு இயந்திர இயக்குநர் - QR 2100



| | |
|---|---|
| • சுத்திகரிப்பு தொழிலாளி (ஆண்/பெண்) | QR 1000 (Rs. 36000.00) |
| • மேசன் | QR 1400 (Rs. 50400.00) |
| • வர்ணம் பூசுபவர் | QR 1400 (Rs. 50400.00) |
| • இரும்பு பொருத்துநர் | QR 1400 (Rs. 50400.00) |
| • தச்சுத் தொழிலாளி | QR 1400 (Rs. 50400.00) |
| • ஏசி தொழிநுட்பவியலாளர் | QR 1400-1800 (Rs. 50400.00-64800.00) |
| • கட்டட மின்னியலாளர் | QR 1400-1600 (Rs. 50400.00-57600.00) |
| • இயந்திர தொழிநுட்பவியலாளர் | QR 1800 (Rs. 64800.00) |
| • குழாய் பொருத்துநர் | QR 1500 (Rs. 54000.00) |

டோகா, கட்டார், டுபாய், குவைத் மற்றும் பஹ்ரேய்ன் ஆகிய நாடுகளில் கீழ் வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- விவசாயம்
- வெதுப்பகத்துடன் இணைந்த உற்பத்தி துறை
- சுத்திகரிப்பும் வீட்டுப் பராமரிப்பும்
- ஹோட்டல், விடுதி மற்றும் வைத்திய சாலை
- வைத்தியமும் முதலுதவியும்
- எண்ணெய் எரி வாயு சுத்திகரிப்பு ஆலை
- பெற்றோலியம்
- கடையும் கடைத்தொகுதியும்
- பூந்தோட்டமும் இயற்கை வனப்பும்

செல்லுபடியாகும் கடவுச் சீட்டுடனும் அனுபவச் சான்றிதழுடனும் நேரில் வரவும்

நிபந்தனைகள்

- 2 வருடகால ஒப்பந்தம்
- இலசவ வைத்திய மற்றும் தங்குமிட வசதி
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரத்தில் 6 நாள் வேலை (12 மணித்தியாலம் பாதுகாப்பு ஊழியர்)
- 2 வருடம் பூர்த்தியானால் கொழும்பு வருவதற்கு இலவச விமான ரிக்கற்

(51541)(10.3)

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மாத்திரம்
மற்றவை எல்லாம் டோஹா, கட்டார், பஹ்ரெய்ன் நாட்டு ஊழியர் சட்ட திட்டங்களுக்கு அமையும்

உங்கள் சுயவிபரங்களை (prudential@sltnet.lk
(starting the category applied in the subject line)
Visit our website - www.prudentialagency.lk
Prudential Foreign Employment Agency
No 108, Colombo Road, Kurunegala
Tel : 077 45 74 555 / 0374945555 / 077 00 31106

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்

யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12வது வருடத்தில்

### பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

### கற்பித்தல் மொழி

ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

### சிறாரகளின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

### பாட விதானமும் கற்பித்தல் முறையும்

NEW SYLLABUS
*Dr. Maria Montessori Method
*Canadian ECE Method
*German LKG, KG, UKG System

எமது கற்பத்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

### பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்

*கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

### பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்

*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

### BBC யின் 11 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் | வடமராட்சி | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | 1வது மைல்கல் , இராச வீதி, நீர்வேலி. |

| BRITISH BUSINESS COLLEGE | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம். | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிதி வைரவர் கோவிலடி | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

British Business College — Where Students Come First

Tel: 077 362 7055, 021 222 4060

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம் செல்லத்துரை

(மத்தொனி, கரவெட்டி)



மத்தொனி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம் செல்லத்துரை (30.08.2014) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் ஆழ்வார் செல்லத்துரையின் (ஓய்வு பெற்ற முகாமையாளர்-மக்கள் வங்கி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-இலட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற வர்களான ஆழ்வார்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், இளம்பிறை நாதன் (யாழ். மாநகரசபை), சத்தியபாமா (லண்டன்), பிரணவநாதன் (ஆணையாளர், யாழ். மாநகர சபை), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், பார்வதி (கனடா), காலஞ்சென்ற அம்மா மற்றும் கந்தசாமி (சட்டத்தரணி), காலஞ்சென்ற தேவி ஆகியோரின் அருமை சகோதரியும், கந்தசாமி, காலஞ்சென்ற இராஜதுரை மற்றும் சிவஞானம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமகள், கிருஷ்ணராஜா (லண்டன்), சிந்துஜா (ஆசிரியை பாசையூர் சென் அன்ரனீஸ் வித்தியாலயம்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், திலோத்தம்மா, சங்கனி, ஆசினி, ஹரிஷ், துளசி, ஔவை, கல்கி, துஷா, அகிர்ஷன் ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இல. 35/7, வில்வம் தெரு, அரியாலையில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்து பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.

தொடர்பு: 071 862 7614, 077 367 8731 (51558) (10)

தகவல்: செ.பிரணவநாதன் (ஆணையாளர் யாழ். மாநகரசபை)

# இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் இல்லாத தீர்வே இந்தியாவின் நிலைப்பாடு

## பா.ஜ.க பொதுச் செயலர் தெரிவிப்பு

களுவாஞ்சிகுடி, ஓக. 31

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்காமல் தீர்வு ஏற்படுவதையே இந்தியா விரும்புகிறது என்றும், பிரதமர் மோடி தலைமையிலான புதிய அரசு இந்தக் கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகப் போவதில்லை எனவும் இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் பி.முரளிதர் ராவ் தெரிவித்துள்ளார்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண அமைச்சருமான ஹாபிஸ் நசீர் அஹமட்டைப் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இந்தியாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வில் ஆழமான கருத்துப் பரிமாறல்களை இருவரும் மேற்கொண்டனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முறையாக நடத்த வேண்டுமென்பதே இந்திய அரசின் விருப்பமாகும் என்று தெரிவித்த முரளிதர் ராவ், இந்திய அரசு தனது அயல் நாடான இலங்கையுடன் நல்லுறவையே பேண விரும்புவதாகவும், இனப் பிரச்சினை இரு நாடுகளின் உறவுகளுக்கும் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்திவிடக்கூடாது என்பதே புதிய இந்திய அரசின் நிலைப்பாடாகும் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை இனியும் இழுபடக்கூடாது எனத் தெரிவித்த அவர், இலங்கை அரசும் தமிழ் மக்களும் விட்டுக்கொடுப்புடன் முன்வந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் -என்றார்.



இதன்போது மு.கா.பிரதித் தலைவர் ஹாபிஸ் நசீர் அஹமட், இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினை இனப் பிரச்சினை தீர்வில் புறக்கணிக்கப்பட்டதையும், இந்தப் பிரச்சினை இழுபடுவதற்கு முஸ்லிம்கள் தொடர்பில் இலங்கை அரசும் தமிழர் தரப்பும் கரிசனை எடுக்காததே மற்றொருகாரணம் என்று கூறினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முரளிதர் ராவ், இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பில் இந்தியா ஏற்கனவே கருத்தில் எடுத்துள்ளதாகவும் அவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் உறுதியுடன் இருப்பதாகவும் தெரிவித்தார். (த-32)


## வயல் விழாவும் காலநிலை அவதானிப்பு மைய திறப்பு விழாவும்

கிளிநொச்சி, ஓக. 31

அண்மைக் காலத்தில் நிலவிய கடும் வறட்சியின் மூலம் மேற் கொள்ளப்பட்ட தொழில் நுட்பங்களினால் பாதுகாக்கப்பட்டு பயன்தரும் வயல் பயிர்களை ஒட்டிய வயல் விழாவும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட வானிலை அவதானிப்பு நிலையம், நோயியல் ஆய்வு கூடம், புதிய அலுவலர், சுற்றுலா விடுதி மற்றும் மறுசீரமைக்கப்பட்ட விடுதி ஆகியவற்றின் திறப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரணை மடுச் சந்தி கிளிநொச்சியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி றொகான் விஜயக்கோன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஓ)

## தேவ அழைத்தல் கண்காட்சியை மன்னார் ஆயர் திறந்து வைத்தார்



மன்னார், ஓக. 31

தேவ அழைத்தல் என்னும் கருப்பொருளில் மன்னார் மறைமாவட்டப் பங்குகள் சேர்ந்து ஏற்பாடு செய்த கண்காட்சி நேற்று சனிக்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜெப ஆசியைத் தொடர்ந்து ஆயரினால் வைபவ ரீதியாகக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

அருட்பணியாளர்கள், அருட் சகோதரர்கள், அருட்ச சகோதரிகள் பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

குறித்த கண்காட்சி நேற்று சனிக்கிழமை முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். (த)

## ஆஸி. பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஓக. 31

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் மற்றும் எட்லொகேட் பிரதிநிதிகளுடன் ஐ.ஐ.எஸ். ஆலோசகர்கள் இணைந்து பொறியியல், விஞ்ஞானம், தாதியியல் மற்றும் இதர உயர்கல்வித் துறைகள் சம்பந்தமான தகவல்களை வழங்குவதுடன் தற்கால உயர்தொழில் வாய்ப்புக்கு ஏற்றால் போல் அவசியமான கருத்துப் பரிமாறல்களையும் தமது நேரடிச் சந்திப்பின் மூலம் வழங்கவுள்ளனர்.

ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து பல்கலைக்கழகங்களுடன் நீண்டகாலத் தொடர்பை மேற்கொண்டு வரும் எட்லொகேட் நிறுவனமானது . 200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள ஐ.ஐ.எஸ்.நிறுவன வளாகத்தில் வடபகுதி வாழ் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதனூடாக மாணவர்கள் தமக்குப் பொருத்தமானதும் பயனுள்ளதுமான மேற்படிப்பு, வேலை வாய்ப்பு மற்றும் நிரந்தர குடியுரிமை தொடர்பான போதிய விளக்கங்களை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 14 ஆவது வருடத்தில் வெற்றிகரமாகக் காலடி எடுத்து வைத்துள்ள எட்லொகேட் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேலும் 31 பல்கலைக்கழகங்கள் (ஆஸ்திரேலியா-17, நியூசிலாந்து-4, இங்கிலாந்து-4, மலேசியா-6) தொடர்பான தகவல்களையும் வடபகுதி மாணவர்கள் தமது சொந்த மொழியில் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக ஐ.ஐ.எஸ். வளவாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்குக் காத்திருக்கும் மாணவர்கள், இளமாணி மற்றும் முதுமாணி கற்கை நெறிகளை மேற்கொள்ளவிருக்கும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அத்துடன் உள்நுழைவுக்கான தகுதிகள் குறைந்த மாணவர்களுக்கு இதர மாற்று மேற்படிப்பு வழிகள் மூலம் மேற்கொள்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படும். இந்தக் கற்கை நெறிகளின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் வழங் கும் நிறுவனங்களுடன் இணைந்து தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுடன் தொழில் தொடர்பான அனுபவத்தை அந்தக் காலத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சேவையின் முதற்கட்டமாக உள்நுழைவுக்குத் தேவையான ஐலெட்ஸ் வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக ஐ.ஐ.எஸ்.- எட் லொகேட் நிறுவனத்தினால் வழங்கப்பட உள்ளது.

பல்லாயிரக்கணக்கான வட பகுதி மாணவர்களின் தேவையறிந்து எட்லொகேட் நிறுவனத்தினர் ஐ.ஐ.எஸ்ஸுடன் இணைந்து தமது சேவைகளை வியாபித்துள்ளமை எமது மாணவர்களுக்கு கிடைத்த ஓர் அரிய வரப்பிரசாதமாகும். இந்த வாய்ப்பைத் தவறவிடாது பயன்படுத்தி தமது எதிர்காலக் கனவுகளை வளமுள்ளதாக்கிக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## நாளை மின் தடை

மன்னார், ஓக. 31

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை மன்னார், வவுனியா பிரதேசங்களில் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை மின் தடை நடைமுறையில் இருக்கும் என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதன்படி மன்னார் பிரதேசத்தில் வைத்தியசாலை, இலங்கை தொலைத் தொடர்பு சேவை நிலையம், நீர்ப்பாசனத் திணைக்களம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, சன்னன்குளம், கள்ளியடி தொடக்கம் தட்சணாமருத மடு வரை, வெள்ளாங்குளம் தொடக்கம் தட்சணா மருதமடு வரை, மன்னார் நகரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவவில் இருந்து பொகஸ் வேவ - 1 வரைக்கும் சிஇசி கல்லுடைக்கும் ஆலை, நெளுக்குளத்தில் இருந்து செட்டிகுளம் வரை, ஓமே காலைன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், விசிகே அரிசி ஆலை, செட்டிகுளம் வைத்தியசாலை, வலயம் - 1, வலயம் - 4, வலயம் - 3, 2 ஆகிய பிரதேசங்களிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (த-10)

## ஐ.நா.நிபுணர் குழுவின் அங்கத்தவர்கள் அரச சார்பற்ற நிறுவனத்துடன் தொடர்பு

கொழும்பு, ஓக. 31

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமாகிய இலங்கையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான அமைப்பில் ஐ.நா.சபை செயலாளர் பான்-கீமூனின் நிபுணர் குழுவின் ஒரு அங்கத்தவரான யஸ்மின் சூக்கா, நோர்வே நாட்டைச் சேர்ந்த படத் தயாரிப்பாளர் பீற் ஆர்னெஸ்ரட் ஆகியோருக்குத் தொடர்பு உள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள முக்கியமான அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான செய்மதி மூலமான ஆய்வுகள் பிரிட்டனைத் தளமாகக் கொண்ட இந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் வேண்டுகோளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. விஞ்ஞானத்தை மேம்படுத்துவதற்கான அமெரிக்க தோழமைக் கழகத்தின் நிலம் தொடர்பான தொழில் நுட்பவியல் மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் செய்மதி மூலமான தரவுகளை பலாலி, காங்கேசன் துறையை உள்ளடக்கிய அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மேற்கொண்டனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இந்தப் பாதுகாப்பு வலயத்தை ஆராய்வதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. இதில் பலாலி விமான படைத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் என்பனவும் உள்ளடக்கப்பட்டன. விடுதலைப் புலிகளிடமிருந்து எதிர் கொண்ட அச்சுறுத்தல்கள் காரணமாக பாதுகாப்பு வலயங்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்தது. அத்துடன் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இங்கு நிலை கொண்டிருந்த இந்தியப் படையினரும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

அமெரிக்க நிறுவனம், கடுமையான போர் இடம்பெற்ற வன்னியின் கிழக்கு முன்னரங்கின் செய்மதி மூலமான படங்களையும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த ஆய்வுக்கான வேண்டுகோளை சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகள் கண்காணிப்பகமும் 2009 ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி விடுத்திருந்தன. இந்த ஆய்வுகளில் 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பொது மக்களுக்கான பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் அங்குள்ள மூன்று இடங்களில் 1,346 இறந்தவர்களைப் புதைக்கும் சடங்குகள் இடம்பெற்றதை அவதானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதை இலங்கை இராணுவத்தினர் ஏற்கவில்லை. புலிகளுக்காகப் போராடி இறந்தவர்களின் இறுதிச் சடங்குகளும் இங்கு இடம்பெற்றதாகவும் இராணுவத்தினர் கூறுகின்றனர்.

மேலும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக இராணுவத்தினர் கூறியதாகவும் இந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வாடகைக்கு

சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்துக்கு அருகில் விருந்தினர் தங்கக்கூடிய அறைகள் சகல வசதிகளுடனும் நாளாந்த அடிப்படையில் வாடகைக்குண்டு.
ஹைஏஸ் வான், ஓட்டோ, படிவாகனம் என்பன இளவாலை சண்டிலிப்பாய் பகுதியில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 078 880 3483/077 160 4059

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி, ஊர்ப் பேட்டுக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில்.
தொடர்பு: 078 880 3483 (சி/15632) (4.6.3)

## வைத்தியம்

நாள்பட்ட அனைத்து நோய்களுக்கும் குணமாக்கும் சிறப்பு சிகிச்சைகள்.
பக்க விளைவுகள் ஏதும் கிடையா.
குழந்தை வேண்டும் தம்பதியருக்கான சிகிச்சைகள்
சித்த வைத்தியர். (சி/15888) (4.6.3)
Dr.R.Sivagurunathan 077 730 1669
ஞாயிறு, திங்கள் நல்லூரில் சந்திக்கலாம்.
சந்திப்பு இலவசம், வெள்ளவத்தையிலும்.

## EDU CONSULTANCY INTERNATIONAL



UK, NEW ZEALAND, AMERICA, CANADA, AUSTRALIA மற்றும் EUROPE ஆகிய நாடுகளுக்கு
எல்லா வகையான Visaக்களுக்கும்,
தேவையான Bank Balance வசதிகள்
மிகக் குறைந்த விலையில் செய்து தரப்படும்.
பிரகாஷ் (LLB)
Tel: - 077 3030391

FLEX Graphic

## தேவை

யாழ். நகரில் உள்ள விடுதி ஒன்றுக்கு Room Boy தேவை.
தொடர்பு: 021 222 4605 காலை 9-மாலை 6 வரை. (51549) (4.6.3)

## EPSON epson printer ink

(low price high quality)

epson INK - 100ML

| | |
|---|---|
| L800 - | 1650/- |
| L100/110 - - | 950/- |
| WF7011 - | 950/- |
| STYLUS PHOTO -1390 - | 1400/- |
| L110 SUPLIMATION INK- | 1000/- |
| PM 245 CARTRIDGE | 1500/- |

MOORTHY DIGITAL COLOUR LAB
62/20, STANLY ROAD, JAFFNA.
0212221358

## LAPTOP

HP 630 i3 LAPTOPஅவசரதேவைக்காக
குறைந்த விலையில் விற்பனைக்கு
0774336247

Join a professional Training program and prepare yourself perfectly and properly for high paid Jobs

Diploma in Air Ticketing and Tourism



- இலங்கை, இந்திய நாட்டு முன்னணி நிறுவனங்கள் இணைந்து 5 வருட வேலைக்கான உத்தரவாதம்
- தமிழ் ஆங்கிலம் சிங்கள மற்றும் French, Dutch மொழிகளில் பயிற்சி
- கற்கை நெறிகளை பின்பற்றும் போதே ஊதியம்
- தங்குமிடம் போக்குவரத்து என்பன முற்றிலும் இலவசம்.
- பயிற்சி நெறிகளை மேற்கொள்ள A/L சித்தியடைந்திருத்தல் போதுமானது.

1 Year
LKR 65000 + Tax
Instalments Method Available



0710920920

Nation Job Bank
www.nationjobbank.com

## வேம்படி செப்.2 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக.31
5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தம் காரணமாக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 3 ஆம் தவணைக்காக செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.

## பச்சை குத்தியவர் விரட்டப்பட்டார்

நல்லூர் ஆலய சூழலில் ஆபத்தான நோய்களைப் பரப் பக்கூடியவை எனச் சந்தேகிக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தி பச்சை குத்தியமை மற்றும் சுகாதார சீர்கேடான வகையில்சுற்றாடலைவைத்திருந்து பச்சை குத்திய வரை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை செய்து விரட்டினர்.
தென்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் ஆலய திருவிழாவின் இறுதி நாள்களில் அவ்வாறு செயற்பட்ட போது விரட்டப்பட்டார். குறித்த நபர் பயன்படுத்தும் உபகரணங்களை உரிய சுகாதார வசதிகளின்றிப் பலருக்கு பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தியதாகக் கூறப்பட்டதையடுத்து அங்கு சென்ற சுகாதாரப் பகுதியினர் அவரை எச்சரித்து விரட்டினர். அவ்வாறு சுகாதார சீர்கேடாகச் செயற்படுவதன் மூலம் எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புகள் இருந்ததாகச் சுட்டிக் காட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (த-4)

## விபத்தில் இருவர் படுகாயம்

வீதியைக் குறுக்கிட்டு கடந்த சைக்கிளை மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் சென்றவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச்சம்பவம்நேற்று மாலை சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டருக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.
சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம்நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளே வீதிக்கு குறுக்காக திடீரென வந்த சைக்கிளைமோதியுள்ளது. இதில் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (த-36)

## நிரந்தர தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம்/ரொபி/கோடியல்/பிஸ்கட்/சொக்லேட்/பால்மா/யோகட்/சோயா/இறைச்சி/கிளவுஸ்/PVC /தேங்காய் எண்ணெய்/புத்தகம்/அச்சகம் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/பொதியிடல்/தரம்பிரித்தல்/லேபல் பிரிவுகளுக்கு ஆள்சேகரிப்பு 18-50 வயது ஆண்/பெண் இருபாலாருக்கும் 18,000/=, 25,000/=, 30,000/= தொழில் அடிப்படையில் சம்பளம் உணவு, பாதுகாப்பான தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள், குழுக்களாகவும், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை தரும் நாளியே வேலை வாய்ப்பு.
தொடர்பு : 077 683 8231 (48983) (7.3)

## தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளான ஜாம்/கோடியல்/பிஸ்கட்/ரொபி/யோகட்/செலட்/PVC/கிளவுஸ்/பால்மா மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல் பிரிவுக்கு மற்றும் துறைமுகம்/விமான நிலையம்/தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (JSO/LSO/SSO/OTC) கனரக, மென்ரக சாரதிகள் பல வெற்றிடமுண்டு. சம்பளம் தொழில் அடிப்படையில் 18,000/=, 42,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்.
தொடர்பு :.077 817 6234 (48982) (7.3)

## இடமாற்றத்தை முன்னிட்டு.....



யாழ் மாநகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே.

- பட்டு சாறிகள்
- சீதன் சாறிகள்
- ஸ்ரோன் சாறிகள்
- சல்வார்கள்
- இந்தியன் ஒராப்
- சேட்
- ஜீன்ஸ்

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(50542)(7.6.3) T.P : 021 221 9393

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில்
தாய், சேய் நல வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய
வைத்திய கலாநிதி
திருமதி ராதா சுதாகர்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - பணிமனை - யாழ்ப்பாணம்.
(C/15626)(7.3)

## மரண அறிவித்தல்

### அலெக்சிஸ்நாதன் ஆரோக்கியநாதர்

(சில்லாலை, மிருசுவில்)



யாழ்.சில்லாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அலெக்சிஸ்நாதன் ஆரோக்கியநாதர் 28.08.2014 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆரோக்கியநாதர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரியதாஸ் இராசநாயகம் தம்பதியரின் மருமகனும், மரியடொல றோஸ்ராணி (ஏழாலை) அவர்களின் அன்புக் கணவரும், விஜயநாதன், தீபநாதன், சோபனா, ஜோநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தாசன் மற்றும் மலர் பொன்சேகா (பத்தரமுல்லை - கொழும்பு), ஜெயநாதன் (லண்டன்), அரியநாதன் (லண்டன்), செல்வநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வண.பிதா. அருள்நேசன் (OMI) அவர்களின் அன்புப் பெறாமகனும், யோகி, நிகால், விமோ, சிறாந்தி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆன்லோர் அவர்களின் அன்பு மாமனாரும், சஞ்யெயநாதன், நீலநாதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (02.09.2014) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்: (51544) (12.3)
சகோதரி - மலர்பொன்சேகா (கொழும்பு) : 0112863912
மனைவி - ராணி (பிரான்ஸ்) : 0033134775398

## வட்டுக்கோட்டையில் புலமைச்சுடர் கையேடு மீட்டல் வகுப்புகள்

### தரம் - 4,3

2015,2016 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கென எதிர்வரும் 8ஆம் திகதியிலிருந்து வெளிவரும் புலமைச்சுடர் கையேட்டின் மீட்டல் வகுப்புகள் புலமைச்சுடர் வளவாளர் எம். சுகந்தனால் சுப்ரா கல்வி நிலையத்தில் நடத்தப்படவுள்ளன. பங்குபற்றி பயன்பெற விரும்புவோர் 0718474320 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு 5ஆம் திகதிக்கு முன்பு முற்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிர்வாகி
சுப்ரா கல்வி நிலையம்
(சி/15886)(4.3.6)

## தற்போது யாழ் நகரில்...




இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

# CAD & BS With MEP

Computer Aided Design & Building Studies
Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

Duration : 6 Month
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Building Careers - Transforming Lives
www.bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 182

# நின்று கொல்லும் சோடா

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்பதன் உண்மையை நாம் எம்முன்னோர்களிடமிருந்தும், அனுபவ ரீதியாகவும் தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் 'நஞ்சு அன்று கொல்லும்,சோடா நின்று கொல்லும்' என்ற விடயம் எம்மில் பலருக்குத் தெரியாது சோடா சக்தி தரும் ஓர் ஆரோக்கிய பானம் என்று நம்பி ஏமாந்து கொண்டிருக்கின்றோம்.

பெருகிவரும் சோடா குடிக்கும் பழக்கம் சுகாதாரத்துறைக்குப் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாகப் பல சுகதேகிகள் இளம் வயதிலேயே பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

சோடா குடிப்பதால் முக்கியமாகப் பற்சிதைவும், பல் சம்பந்தமான நோய்களும், எலும்பு பலவீனமடைதலும், மூட்டு சம்பந்தமான நோய்களும், உடல் நிறை அதிகரிப்பு, சலரோகம், குருதியில் PH மட்டத்தில் ஏற்படும் மாறுபாடுகள், குருதி அமுக்கநோய், குருதியில் கொழுப்பின் அளவு அதிகரித்தல், இருதய நோய்கள், ஒஸ்ரியோ போறோசிஸ் போன்ற நோய்களும் ஏற்படும்.

இவ்வாறான ஆபத்தான பானங்கள் திருமண வீடுகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஏன் நோயாளர்களுக்கும்கூட பரிமாறப்பட்டு வருகின்றன என்பது ஒரு வேதனையான விடயமாகும். இளம் வயதிலேயே பலருக்கு நீரிழிவு நோய், கொலஸ்ரோல் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு போன்றவை ஏற்படுவதற்கு அதிகரித்த சோடாப் பாவனை ஒரு முக்கியமான காரணமாக விளங்குகின்றது.

வேலைச் சுகத்துக்காகச் சோடாவைக் கொடுத்து உடற் சுகத்தைக் கெடுத்துக் கொள்வதா? எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும் போது "வை திஸ் கொலைவெறி" என்னும் பாடல்தான் ஞாபகம் வருகின்றது.




அர்த்தமான உணவுகளான முட்டையைச் சாப்பிடவும் பாலைக் குடிக்கவும் பயப்படும் நம்மவர்களுக்கு ஆபத்தான சோடா வகைகளைப் போத்தல் போத்தலாக வாங்கிக் குடிக்கும் துணிவு எங்கிருந்து வந்தது. அனைவரும் சுகமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை உள்ள எமக்கு பிறருக்கு சோடா கொடுக்க எப்படி மனம் வந்தது. வேலைச் சுகத்துக்காகச் சோடாவைக் கொடுத்து உடற் சுகத்தைக் கெடுத்துக் கொள்வதா? எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும் போது "வை திஸ் கொலைவெறி" என்னும் பாடல்தான் ஞாபகம் வருகின்றது.

நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, சகுனம் பார்த்து, மங்கலகரமாகச் செய்யும் சுபகாரியங்களுக்கும் கூட இந்த ஆபத்தான சோடா வகைகளைப் பரிமாறும் பாரம்பரியம் எங்கிருந்து வந்தது. சோடா குடிக்க வேண்டாம் என்று சொன்னால் "அப்போ தாகத்துக்கு எதைக் குடிப்பது?" என்று கேட்பவர்களுக்குப் பதிலாக எதைச் சொல்வது? எம் சந்ததியின் சுகத்துக்காக நாம் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

காலம் காலமாக நாம் பயன்படுத்தி வந்த இயற்கையான, பாதுகாப்பான குடிபான வகைகளை நாம் மீண்டும் பயன்படுத்த முயலுவோம். நின்று கொல்லும் பானமான சோடாவைக் குடிப்பதையும் கொடுப்பதையும் நிறுத்துவோம். இயற்கையான பானங்களான பழரசம், இளநீர், தேசிக்காய்த் தண்ணீர், மழை நீர், மோர், குத்தரிசிக் கஞ்சி, வீட்டிலே தயாரித்த கூழ், சுட்டு ஆறிய நீர், பால், சீனி சேர்க்காத தேநீர், தோடம்பழத் தண்ணீர், ரசம், குடிதண்ணீர், சூப் போன்ற பானங்களை அருந்துவது சிறந்தது.

அதிகளவு சீனிச்சத்தும் இரசாயனப் பதார்த்தங்களும் சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும் சேர்க்கப்பட்டு பல்வேறு வகையான விளம்பரங்களுடன் விற்பனையாகும் சோடா வகைகளிடம் நாம் ஏமாறப் போகிறோமா? வருத்தத்தை விலைகொடுத்து வாங்கப் போகிறோமா? இளம் வயதில் எமது பிள்ளைகளை நீரிழிவு நோயாளியாகப் பார்க்க ஆசைப்படுகிறோமா? எலும்பு, மூட்டு நோய்களுக்கு ஆளாகி நோவால் அவதிப்படப் போகிறோமா? சோடாவை வாங்கும் முன் இவற்றைச் சிந்திப்போம். அமங்கல பானமான சோடாவை மங்கலகரமான நிகழ்வுகளில் பரிமாறுவதை நிறுத்துவோம். பொது நிகழ்வுகளில் சுலபமாகப் பரிமாறக் கூடிய ஆரோக்கியமான பானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்குவோம்.

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# ஆழ்ந்த தூக்கத்துக்கு...

தூக்கம் ஒவ்வொரு உயிருக்கும் இன்றியமையாததும், தவிர்க்க முடியாததும் ஆகும், அத்துடன் அது ஓர் இயற்கையான நிகழ்வும் ஆகும். இது நலமான வாழ்வுக்கும் சுகமான ஆரோக்கியத்துக்கும் அவசியம். ஒருவர் எத்தனை மணிநேரம் படுக்கையிற் படுத்து இருக்கிறார் என்பது முக்கியம் அல்ல. எவ்வளவு நேரம் நன்றாகத் தூங்குகிறார் என்பதுதான் முக்கியம். ஆழ்ந்த தூக்கத்தின் பயன்களாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

01. பகலில் அதிக வேலை செய்த தசைகள் நரம்புகளுக்கு ஓய்வை அளிக்கிறது.
02. உடலில் அதிக சக்தியை சேமிக்க உதவுகிறது.
03. இரவு நேர உடல் வளர்ச்சி (சுரப்புநீர்) (Growth Hormone) அதிகம் சுரப்பதால் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றது.
04. பல்வேறு நோய்களால் ஏற்படும் கலங்கள் மற்றும் திசுக்கள் மற்றும் இழையங்களில் ஏற்படும் பாதிப்புக்களைப் பழுது நீக்க உதவுகிறது.
05. எமது முகத் தசைகளுக்கும், தோலுக்கும் ஓய்வளித்துச் தோலைச் சுருக்காதவாறு வைத்திருக்கிறது.
06. எமது உடலின் முழுமையான களைப்பைக் குறைக்கின்றது. அத்துடன் பகலில் உடலாலும், மனதாலும் இழக்கும் சக்தியை இரவில் தூக்கத்தில் மீளவும் பெறுவதற்கு உதவுகிறது.
07. பிறக்கும் புதிய நாளின் சோதனைகள், கடமைகளை எதிர் கொள்ள உடலுக்கும், உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது.
08. எமது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை ஊக்குவித்து உடலைப் பாதுகாப்பதுடன் இருதயநோய்கள், உயர்குருதி அமுக்கம்போன்ற நோய்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கும்அவைஏற்படின்அவற்றை வேகமாக குணப்படுத்துவதற்கும் ஆழ்ந்த தூக்கம் உதவுகின்றது.
09. மன அழுத்தம் மற்றும் உளம் சார்ந்த நோய்களைக் குணப்படுத்த ஆழ்ந்த தூக்கம் மிக இன்றியமையாதது. இது போன்ற பல நன்மைகளை ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து மனிதன் பெறுகின்றான். தூக்கம் ஒரு மர்ம மாளிகையைப் போன்றது. அதன் வாசல்களைத் திறந்து அதனுள் மறைந்து இருக்கும் இரகசியங்களை விஞ்ஞானிகள் இன்றும் ஆராய்ந்து கொண்டு இருக்கின்றார்கள். எனினும் தூக்கத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆய்வுகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை என்று கூடக் கூறலாம்.

**ஒருவர் ஆழ்ந்த தூக்கத்தைப் பெறுவதற்குச் சில வழிகள்**

01. அவரவர் வசதிக்கேற்ப முதலில் தூங்கும் இடத்தைத் தூக்கம் வருவதற்கு ஏற்றதான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற மாதிரி அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க முயலுங்கள். பாய் முதற்கொண்டு பெற்சீற் தலையணைக் கவர் வரை அடிக்கடி சுத்தம் செய்து மாற்றிக் கொள்ளுங்கள்.
02. கணினி,தொலைக்காட்சிப் பெட்டிகள்போன்ற மின் சாதனங்களைப் படுக்கை அறையில் வைத்திருப்பதைத் தவிருங்கள். இவற்றில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் உங்கள் தூக்கத்தைக் கலைக்கலாம்.
03. நன்றாகத் தூங்குவதற்கு தினமும் செய்யும் உடற்பயிற்சி உதவும். காலை நேர உடற்பயிற்சி நல்லது: அத்துடன் தூங்கப் போவதற்கு முன்பு செய்யும் லேசான உடற்பயிற்சி தூக்கத்தை வரவழைக்கும்.
04. ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குத் தூங்கப் போகும் பழக்கம் வேண்டும். நேரத்தை மாற்றி மாற்றிக் கண்ட நேரத்தில் தூங்குவது தூக்கத்தைக் கெடுக்கும்.
05. தூக்கத்தைக் கெடுக்கக்கூடிய மது, கோப்பி, கோலா பானங்கள், சிகரெட் போன்றவற்றைத் தூங்கப் போகும் நேரத்தில் பாவிப்பதைத் தவிருங்கள்.
06. வயிறு காலியாக இருந்தாலும் தூக்கம் வராது. மிதமான உணவு, காரமற்ற, எண்ணெய் அற்ற உணவு சிறந்தது.
07. படுக்கப் போகும் முன்பு ஒரு கோப்பை பால் அருந்துவது நல்லது. பாலில் தூக்கத்தைத் தூண்டும் பொருளாக "டிரிப்டோபான்" இருக்கிறது. எனினும் ஆஸ்துமா, சுவாசக்குழாய் அழற்சி, கொலஸ்ரோல் சம்பந்தமான நோயுள்ளவர்கள் வைத்திய ஆலோசனையுடன் அருந்தலாம்.
08. உங்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற நோய்கள் இருப்பினும் அவற்றைக் கட்டுப்பாட்டிலும் சீராக வைத்திருப்பதன் மூலமும், மருந்து உணவுகளை ஒழுங்காக எடுப்பதன் மூலமும் நல்ல தூக்கத்தைப் பெறமுடியும்.
09. மன அழுத்தம், உளம் சார்ந்த நோய்கள், பாதிப்புகள் இருப்பின் அதற்குரிய மருந்துகளைச் சீராக எடுத்தலும், வைத்திய ஆலோசனையை சீராகப் பெறுதலும், வைத்தியரிடம் உங்களுக்கு இருக்கும் பாதிப்புக்களை ஒளிவு மறைவு இன்றிக் கூறுவதன் மூலமும் சரியான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும்.



10. படுக்கப் போவதற்கு முன்பு வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்தல், மெல்லிய இசையை ரசித்தபடி படுப்பது, புத்தகங்கள் படிப்பது, தியானம், மூச்சுப் பயிற்சிகளைச் செய்யலாம்.
11. கதவு, யன்னல்களில் ஊடாக வரும் இயற்கையான புத்தம் புதிய காற்றுக்கு எதுவும் இணையாகாது. எனவே உங்கள் படுக்கை அறைக்கு முடியுமானால் இயற்கையான காற்று கிடைக்கக் கூடியதாகச் செய்யுங்கள். அத்துடன் குறைவான வெப்பத்தை உமிழும் மின் விளக்குகளைப் பொருத்துங்கள். இவை குளிர்ச்சியாக இருப்பதோடு இயற்கை வெளிச்சத்தை ஒத்ததாகவும் இருக்கும்.
12. உங்கள் படுக்கை அறையின் படுக்கை விரிப்புகள், பெற்சீற், கதவு, ஜன்னல் சீலைகள் மற்றும் படுக்கை அறையின் சுவர் போன்றவற்றின் நிறம் உங்கள் கண்களுக்கும் மனதுக்கும் இதமளிக்கக்கூடிய அடர்த்தி குறைந்த நீலம், வயலட், பச்சை போன்ற மெல்லிய நிறங்களாக இருப்பது நல்லது.
13. தூங்கும்போது தலைக்கு வைத்திருக்கும் தலையணை, தலை மற்றும் கழுத்தைச் சரியாகத் தாங்கக்கூடியதாக மெல்லிய கச்சிதமான 4 அங்குலத்துக்கு (உயரம்) மேற்படாத தலையணையை தேவைப்படின் உபயோகியுங்கள். மற்றும் இறுக்கம் இல்லாத உடைகளை அணிதல் அண்டும். பொருள்களை (திறப்பு, பேஸ்) அணிந்திருக்கும் உடையில் வைத்திருத்தல் உறுத்தல் ஏற்படுத்தும் ஆதலால் இவற்றைத் தவிர்ப்பது நல்லது.
14. உங்கள் படுக்கை அறையில் கொசு,ஈ,கரப்பான்,பூச்சி, எறும்பு, மூட்டைப்பூச்சி போன்றவற்றுக்கு மருந்து தெளிப்பதன் மூலம் இவற்றின் உறுத்தல்களைத் தவிர்க்கலாம். தேவைப்படின் நுளம்பு வலை பாவிக்கலாம்.
15. ஒளி உமிழும் மணி அடிக்கும் சுவர்க்கடிகாரம், சுற்றுப்புறத்தில் இருக்கும் ஒலி, மாசு அறை, புகை, தூசு ஆகியவை உட்செல்வதைக் குறைக்கக் கூடியதாகப் படுக்கை அறை அமைதல் நல்லது.
16. குறட்டை விடுபவர்கள் ஆழ்ந்த தூக்கத்துக்குச் செல்வது சிரமமாதலால் குறட்டையைக் குறைப்பதற்குரிய வழிமுறைகளைக் கையாள வேண்டும். உதாரணமாக அதீத பருமன் உடையவர்கள் இடது புறம் அல்லது பக்க வாட்டில் படுத்தல் வேண்டும். மல்லாந்து படுத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.

ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா வைத்தியசாலை.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொள்ளை போகிறது வளம் காப்பு முறை உடன் தேவை

*30 வருடங்களாக வடக்கு - கிழக்கில் நடந்த போர் மிகப் பெரும் அழிவுகளை இங்கு ஏற்படுத்தியது என்றபோதும் மற்றொருபுறத்தில் அது சில நன்மைகளையும் ஏற்படுத்தியது. அதில் முதன்மையானது வடக்கில் இருந்த இயற்கை வளங்கள் பெரு முதலாளிகளாலும் அரசாலும் கொள்ளையிடப்படாமலும் சுரண்டப்படாமலும் பாதுகாக்கப்பட்டமையாகும்.*

*வடக்கின் பெரும் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமையும் புலிகளைத் தாண்டி வளங்களைக் கொள்ளையிட முடியாமல் இருந்தமையும் இதற்கான முதன்மைக் காரணம். அந்த வகையில் வடக்கில் கிடைக்கக்கூடிய ஒரு சில இயற்கை வளங்கள் 3 தசாப்தங்களாக அப்படியே சேமிக்கப்பட்டன; பொக்கிஷங்களாக்கப்பட்டன.*

*இலங்கை - இந்தியக் கடல் வளத்தை இதற்கான மிகச் சிறந்த உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். தனித் தமிழீழத்துக்கான போர் நடந்ததன் காரணமாக வடக்குக் கிழக்குக் கடலில் மீன் வளத்தை எமது கடலோடிகளால் அளவுக்கு மீறி அள்ள முடியவில்லை. ஆனால் அதே காலத்தில் இந்தியக் கடல் பகுதியில் விசைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்களை அள்ளிக் குவித்துக் கொள்ளை லாபம் ஈட்டினார்கள். விளைவு இன்று இந்தியக் கடல் பகுதியில் மீன்கள் இல்லை. கடலுணவு வகைகள் அருகிவிட்டன. அதே சமயம், இலங்கைக் கடல் பகுதியில் மீன் வளம் இன்னமும் பெரிய அளவில் இருக்கிறது. பெருமளவில் கிடைக்கும் மீன்களைப் பிடிக்கத்தான் எல்லை தாண்டி இந்திய மீனவர்கள் வருகிறார்கள்.*

*இதே நிலைமைதான் வடக்கில் இருக்கும் ஒரு சில இயற்கை வளங்களுக்கும் நிகழ்ந்தது. போர்ச் சூழல் காரணமாக அவை பாதுகாப்பாக இருந்தன. அவற்றுள் முக்கியமானவை, இல்மனைற் மணல் மற்றும் வன்னிக் காடுகளில் உள்ள பெரும் மரங்கள். இப்போது அவற்றைக் கொள்ளையிடவும் சுரண்டவும் ஆரம்பித்து விட்டார்கள்.*

*வன்னிக் காடுகளில் அனுமதி பெறப்படாமல் வகை தொகையின்றி மரங்கள் வெட்டப்படுகின்றன. ஒரு சிலவே பொலிஸாரால் கைப்பற்றப்படுகின்றன. ஆனால் பெருமெடுப்பில் அதிகார வர்க்கத்தின் ஆசியுடன் மரங்கள் கடத்தப்படுகின்றன. கொள்ளை லாபம் அடிக்கும் நோக்குடன் இயற்கையின் பாதிப்புப் பற்றிய அக்கறை இன்றி இந்தச் சுரண்டல் நடக்கிறது.*

*இது ஒருபுறத்தில் தொடர்ந்துகொண்டிருக்க, கொக்கிளாய் ஆற்றுப் படுக்கையில் இருந்து இல்மனைட் மணலைக் கொள்ளையிடும் நடவடிக்கையும் இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.*

*அரச ஆதரவு பெற்ற சக்திகளே இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று பரவலான குற்றச்சாட்டும் உண்டு.*

*வளங்கள் மனிதப் பயன்பாட்டுக்கு உரியவைதான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதில் கட்டுப்பாடும், கண்காணிப்பும் அவசியம். இயற்கை அழிவு ஏற்படும் வகையில் வளப் பங்கீடு அமையக்கூடாது. அத்தோடு அந்தந்தப் பகுதி வளங்களினால் கிடைக்கக் கூடிய பயன் அந்தப் பகுதி மக்களையும் சென்றடைய வேண்டும். இதுவே இயற்கை நீதி.*

*இவை அனைத்தையும் புறந்தள்ளி அதிகாரமிக்க சக்திகள் வளங்களைக் கொள்ளையிடுவது ஏற்புடையதன்று. இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான தெளிவான பொறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.*

*மத்திய அரசின் அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டு, வடக்கின் இயற்கை வளங்களைச் சுரண்டிக்கொண்டு ஒரு சில பெரு முதலாளிகள் கொழுப்பதைத் தடுப்பதற்கான தெளிவான திட்டத்தை வடக்கு மாகாண சபை உருவாக்க வேண்டும். அத்தோடு அந்த வளங்களில் இருந்து தமிழ் மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களையும் அது முன் மொழியவேண்டும்.*

# தமிழரசுக் கட்சி தமிழர்களின் உயிர் மூச்சு; விடுதலை விருட்சம்

கந்தவனம் கோணேஸ்வரன்

எதிர்வரும் செப்ரெம்பர் முற்பகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதினைந்தாவது தேசிய மாநாடு வவுனியாவில் இடம்பெறவிருக்கிறது. அதற்கு முன்னோடி நடவடிக்கைகளாக, புதிய உறுப்பினர்களை உள்வாங்கல், ஊர்கள்தோறும் கிளைகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. ஏறத்தாழ அவை நிறைவுறும் தறுவாயிலும் இருக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழர்களின் பாரம்பரிய விடுதலை இயக்கம். 1949 டிசெம்பர் 18ஆம் திகதி தந்தை செல்வாவால் தொடக்கிவைக்கப்பட்டது. இக்கட்சி இன்றுவரை தனது அரசியல் இலக்கை மாற்றாமல் த்மிழர்களைச் சரியான பாதையில் இட்டுச்செல்லும் பணியைச் செய்துவருகிறது. அரசின் பணத்துக்கு விலைப்படாமல், பதவிகளுக்காகச் சோரம் போகாமல், சலசலப்புகளுக்கு அடிபணியாமல் ஓர் அமைப்பு அணுகளவும் பிசகின்றி இன்றுவரை போராடுகின்றதென்றால் அந்தப் பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் அது சார்ந்து நிற்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மட்டுமே உரியது.


இலங்கையின் மூத்த தமிழர் கட்சியாக இயங்கிவந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அரசியல்போக்கால் அதிருப்தியுற்ற நிலையில் தொடக்கப்பட்டதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சி. அது சந்தித்த இரண்டாவது தேர்தல் தொடக்கம் 1989இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஈரோஸ் அமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மை இடங்களில் கைப்பற்றிய ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர, மற்றெல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழரின் மிகப்பெருங் குரலாகவே தேர்தல் காலங்களில் அது மக்களால் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சிமேல் தமிழர்களுக்கு அதீத நம்பிக்கை உண்டு. அதன் தலைவர்களை மக்கள் மனதார நேசிக்கிறார்கள். தவறான கொள்கைகளைத் தாங்கியவர்கள்கூட தமிழரசுக் கட்சியின் தொடர்பால் புனிதம் பெற்றிருக்கிறார்கள். வடக்கு, கிழக்கில் முஸ்லிம் தலைவர்களை உருவாக்கித்தந்த பெருமையும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இருக்கிறது. அவர்கள் வெற்றிபெற்ற பின்னர் அரசிடம் விலைப்பட்டு, கட்சிமாறி அதன் பின்னர் தமிழர்கள் வேறு இனம், முஸ்லிம்கள் வேறு இனம், பெரும்பான்மையினரோடு சேர்ந்து அரசியல் செய்வதுதான் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு எனச் சந்தர்ப்பவாதம் பேசியதுமுண்டு. ஆயினும், தமிழர்களோடு இணைந்து அரசியல் செய்திருந்தால் இன்று தமிழர்களும் விடிவு பெற்றிருப்பார்கள், முஸ்லிம்களும் விடுதலை அடைந்திருப்பார்கள் என்று அடித்துக் கூறும் முஸ்லிம்களும் நிறையவே உள்ளனர். அவர்களுக்காக எப்போதும் தன் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டபோது இணைப்பாட்சியே அதன் இலக்காக இருந்தது. இதனால் சமஷ்டிக் கட்சியென்றும் அழைக்கப்பட்டது. அதன் உத்தியோகபூர்வமான பெயர், இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றிருந்த போதிலும் அதன் கொள்கை காரணமாக ஆங்கிலப் பத்திரிகைகளிலும் சிங்களப் பத்திரிகைகளிலும் சமஷ்டிக் கட்சி என்ற பெயருக்கு இணையான பதமே எழுதப்பட்டு வந்ததால் சிங்கள மக்கள் மத்தியில் அப்பெயரே பிரபல்யமாகவும் இருந்தது.

கட்சியின் ஆரம்ப கர்த்தாவான தந்தை செல்வா அமைதியாக - அதேவேளை உறுதியாகப் போராடினார். அஹிம்சை வழியில் போராடுவதென்ற முடிவை அவர்தம் வாழ்நாளில் ஒருபொழுதேனும் தளர்த்திக்கொண்டவரல்லர். பண்டா, டட்லி அரசுகளால் ஏமாற்றப்பட்டபோதும், காலிமுகத்திடலில் தொண்டர்களோடு சேர்ந்து அடிவாங்கிய போதும், சிறைக்குச் சென்றபோதும், சத்தியாக்கிரகம் செய்த நாள்களில் துயருற்றபோதும் அவர் சாந்த குணத்துடனேயே அவற்றை எதிர்கொண்டார். இதனால்தான் அவர் ஈழத்தமிழ் மக்களின் தந்தை எனக் கொண்டாடப்படுகிறார். அவர் வார்த்தைகளுக்கு ஈழத் தமிழகம் முழுமையாகவே கட்டுப்பட்டுக் கிடந்தது.





இலங்கைத் தமிழரசுக் கட்சியால் வடக்கு, கிழக்கு மாவட்டக் கச்சேரிகளின் முன்னால் 1961 பெப்ரவரியில் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கப்பட்டது. ஏராளமான மக்களை ஒன்றுதிரட்டி மாபெரும் போராட்டமாகவும் அது அமைந்திருந்தது. காலையில் தொண்டர்கள் தாமாகவே தம்பகுதிக் கச்சேரி வாயிலின்முன்னே ஒன்றுதிரள்வார்கள். கச்சேரி உத்தியோகத்தர்கள் கச்சேரிக்குள் நுழையமுடியாதபடி வெளிவாயிலின் முன்னால் அமர்ந்திருந்து சத்தியாக்கிரகம் செய்வார்கள். வெயிலோ மழையோ அமர்ந்த இடத்திலிருந்து அவர்கள் நகராமலே இருப்பார்கள். ஊரே திரண்டுவந்து ஈடுபட்ட இப் போராட்டத்தால் தமிழ்ப்பகுதிகளில் அரச நிர்வாகம் சில மாதங்களாக் நிலை குலைந்து போயிருந்தது. இந்தப் போராட்டத்தின்போது இன்றைய தலைவர் இரா.சம்பந்தன் இருபத்தைந்து வயது நிரம்பிய இளஞ்சட்டத்தரணியாக திருகோணமலையில் மூத்த தலைவர்களுடன் இணைந்து துடிப்புடன் செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் முருகேசு திருச்செல்வத்தின் ஆலோசனைக்கிணங்க தமிழர் கூட்டணி 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பைத் தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், மலையகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகிய மூவரும் சமகாலத்தில் ஏற்றிருந்தனர். அப்போது தந்தையின் அரசியல் விரோதியாக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைத் தேடி ஒற்றுமைக்கான அழைப்பை விடுக்கத் தந்தை செல்வநாயகமே நேரிற் சென்றார். அது தந்தையின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டு. தந்தையின் வரவை அங்கீகரித்து அவரின் வேண்டுகோளை முகமலர்வுடன் ஏற்றுத் தமிழர் ஒற்றுமையை நிலைநாட்டிய தனிப் பெருந்தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பெருந்தன்மை அதையும் விஞ்சுவதாக இருந்தது.

இப்போது அரசு பிதற்றுவதுபோலவே அப்போது ஸ்ரீமாவோ தலைமையிலான அரசும் தனது ஏவலாள்களைக் கொண்டு தமிழர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பக்கம் இல்லை என்றும் தம் பக்கமே இருக்கிறார்கள் என்று பரப்புரை செய்தது. பிரதமர் உட்பட எல்லா அமைச்சர்களும் நாக்கூசாமல் மேடைகள் தோறும் இத்தகைய பரப்பு ரைகளைச் செய்யத்தொடங்கியபோது, இதனையே சவாலாக ஏற்றுத் தந்தை செல்வா தான் பிரதிநிதித்துவம் செய்த காங்கேசன் துறைக்கான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 02.10.1972இல் துறந்து தமிழ் மக்களின் உள்ளக்கிடக் கையை உறுதி செய்ய அரசுக்கு வாய்ப்பேற்படுத் திக் கொடுத்தார். அரசு இரண்டரை ஆண்டு காலமாகத் தேர்தல் நடத்தாமல் காங்கேசன்துறைத் தொகு தியில் பெருந் தொகையான பணத்தைச் செலவிட்டு அங்குள்ள மக்களை ஈர்க்க முயன்ற போதிலும் அது வெற்றிபெறவில்லை. 06.02.1975இல் இடைத்தேர் தல் நடத்தப்பட்டபோது தந்தை செல்வா மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று தமிழர்கள் அரசின் பக்க மும் இல்லை, அரசமைப்பை ஏற்றுக் கொள்ளவுமில்லை என்பதை உலகுக்கு நிரூபித்தார்.

பல துன்பதுயரங்களைக் கடந்து மக்களை நெறிப்படுத்திவந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப்புலிகள் பலம்பெற்றிருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மாற்றம் பெற்றது. இந்த மாற்றம் 2002இல் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்பவை ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகித் தமிழர்களை வழிநடத்தத் தொடங்கி அது இன்றுவரை தொடர்கிறது.

அத்தகையதொரு பாரம்பரியக் கட்சி இப்போது புதியவர்களை உள்வாங்கியும், கிளைகளைப் புனரமைத்தும், புதிய உத்வேகத்துடன் தமிழர்களின் தலைமைக் கட்சியாகத் தொடர்ந்தும் செயற்படுவதற்காகத் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முனைந்திருக்கிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சி வெறுமனே ஒரு கட்சியல்ல. பதவிக்காக ஒன்றுகூடியவர்களின் கூட்டுமல்ல. எவ்வழியிலேனும் பொருள் சேர்த்து வசதியுடன் வாழத் துடிப்பவர்களுக்கான புகலிடமுமல்ல. 1949ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் கண்ணீராலும் செந்நீராலும் வளர்க்கப்பட்ட விடுதலை விருட்சம். தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை அவர்களைப் பாதுகாத்து வழி நடத்தவேண்டிய பொறுப்புகளைச் சுமந்துநிற்கும் ஒரு தலவிருட்சம்.

சர்வதேச நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் இன்றைய அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்துவிடுவதற்காக பல்வேறு முயற்சிகளைச் செய்துவருகிறது. போர்க்குற்ற விசாரணைக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருக்கும் அரசு இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சிதைத்தொழித்துத் தமிழர்களின் போராட்ட உணர்வைக் குலைத்துவிட கங்கணம் கட்டியிருக்கிறது. அதற்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுவதற்கும் அது தயங்கப் போவதில்லை. இவற்றை மனத்திலிருத்திக் கட்சியைப் பாதுகாக்கவேண்டிய கடமை தொண்டர்களுக்கு இருக்கிறது.

காய்க்கும் மரத்தில் கனி பறிப்பதற்கு ஆரவாரத்துடன் வருபவர்களையிட்டுக் கட்சித் தொண்டர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.



# ஏன் நாம் ஈசொப்ற்றை தெரிவு செய்ய வேண்டும்?

ஈசொப்ற் மெற்றோ கம்பஸ் நிறுவனமானது இலங்கையில் மிகப் பெரிய தகவல் தொழி நுட்ப வலையமைப்பினைக் கொண்டுள்ளது. தகவல் தொழிநுட்பம், ஆங்கிலம், வியாபார முகாமைத்துவம் மற்றும் பொறியியற்துறை போன்ற சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறிகளை மாணவர்களுக்குப் போதிப்பதில் இலங்கையில் முதற்தரக் கணணி நிறுவ னமாகத் திகழ்கின்றது.

இலங்கையில் 14 வருடகால நம்பகமான உயர்கல்விச்சேவையை மாணவர்களுக்கு வழங்கி வரும் ஈசொப்ற் நிறுவனம் 3 வருடப் பட்டப்படிப்பினை முதல் இரு ஆண்டுக் கல்வி யான சர்வதேச அங்கீகார முள்ள எச்.என்.டி கற்கையைக் குறைந்த மூலதனத்துடன் யாழ்ப்பாணக் கிளையிலே கற்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீக ரிக்கப்பட்ட தலைசிறந்த இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களின் பட்டமொன்றினை யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பூர்த்தி செய்யும் சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குகின்றது.

இலங்கையில் மிகப்பிரசித்தி பெற்ற தரமான கல்வியை வழங்கும் ஈசொப்ற் நிறுவனமானது இங்கிலாந்து எடெக்ஸெல் நிறுவனத்தின் இலங்கையின் கிளையானது மிகத்துரித மாக வளர்ந்து வரும் எடெக்ஸெல் நிலையமாக காணப்படுவது சிறப்பம்சமா கும். கல்விக்கு பிரபல்யமான யாழ்ப்பா ணத்தில் மிகச்சிறந்த முழுநேர, பகுதி நேர விரிவுரையாளர்களை தன்னகத்தே கொண்டுள்ள ஈசொப்ற் யாழ் கிளையானது எச்.என்.டி கல்வியினை போதிப்பதற்கு பயிற்றப்பட்ட இளமாணி, முதுமாணி பட்ட, பட்ட மேற்படிப்புகளை உடைய விரிவுரையாளர்கள் மூலம் இக்கல்வியினை மாணவர்களுக்கு போதிப்பது சிறப்பம்சமாகும்.

மாணவர்கள் கல்வியை கற்பதற்கு ஏற்றவாறு குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், நவீன ஆய்வுகூட வசதிகள், வரையறையற்ற இணையத்தள வசதிகள், நூலக வசதிகள் என்பவற் றைக் கொண்டுள்ளதுடன் மாணவர்களது கற்றல் செயற்பாட்டிற்கு மேலும் வலுவூட்டுவ தற்காக கற்கை நெறி அனைத்திற்குமான பாடப்புத் தகங்கள் முற்றிலும் இலவசமாக ஈசொப் றினால் மட்டுமே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஐம்பது ஆண்டு கால பிரசித்தி பெற்ற பிரித்தானியா பி.சி. எஸ் நிறுவனத்தின் மூன்று நிலைகளையும் போதிப்பதற்கு இலங்கை யில் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனமாகக் காணப் படும் ஈசொப்ற், பி.சி.எஸ் நிறுவனத்தின் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை எச்.என். டி பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இலவ சமாக வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான லண்டன் மெற்றோ பொலிற்றன் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளின் இறுதியாண்டை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் குறைந்த மூலதனத் தில் ஈசொப்ற் மூலம் தொடர முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# கியூ.ஐ.பி கம்பஸ் வழங்கும் தேசிய, சர்வதேச புலமைப்பரிசிலுக்கான அறிவுத்திறன் தேர்வு

கியூ.ஐ.பி கம்பஸ் வழங்கும் தேசிய மற்றும் சர்வதேச புலமைப் பரிசிலுக்கான அறிவுத்திறன் தேர்வு 2014.09.11ஆம் திகதியன்று இல. 159/3 கொடகமை சந்தி, ஹைலெவல் வீதி, ஹோமாகமையில் அமைந்திருக்கும் கியூ.ஐ.பி கம்பஸ்ஸில் நடைபெறவுள்ளது.

கடந்த பத்தாண்டு காலத்திற்குள் 80 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதிமிக்க புலமைப்பரிசில்களை வழங்கிய கியூ.ஐ.பி கம்பஸ் 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக்கான உயர் கல்விக்கான சர்வதேச விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இலவசமாக நடைபெறவுள்ள இந்த புலமைப்பரிசில் பரீட்சையில் தாம் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் 15 வீதம், 25 வீதம், 50வீதம், 75வீதம், 100 வீதம் ஆகிய வீதங்களுக்கேற்ற வகையில் தாம் கற்க விரும்பும் பாடத்திற்கு புலமைப்பரிசில் வழங்கப்படும். அப்புலமைப்பரிசில் அளவிற்கேற்ப பாடக்கட்டணங்கள் குறைக்கப்படும்.

வெளிநாட்டில் விஷேட பாடத்திட்டமொன்றை மேற்கொள்வதற்கு மற்றும் வெளிநாட்டில் தொழில் வாய்ப்பினைப் பெற்று, அதன் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தை அமைத்திட எதிர்பார்க்கும் ஜீ.சி.ஈ சாதாரண தர மற்றும் உயர் தர மாணவர்கள், பெற்றோருக்கு சுமையற்ற, சுயாதீனமான கல்வியினைப் பெறுவதற்கான அரிய வாய்ப்பிது.

நீங்கள் செய்ய வேண்டியதென்னவெனில், www.queensia.com இணைதயத்திற்கு சென்று குறிப்பிட்ட விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பி வைத்தல் அல்லது புலமைப்பரிசில் பரீட்சை நடக்கும் திதனத்தன்று அதாவது 2014.09.11ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கியூ.ஐ.பி கம்பஸுக்கு வருகை தந்து பதிவுசெய்த பரீட்சைக்குத் தோற்றுவதே ஆகும். மேலதிக விபரங்களை info@qibcampus.com மின்னஞ்சல் வாயிலாக அறியவும்.

புலமைப்பரிசிலில் சித்தியடைந்து வெளிநாட்டிற்கு சென்று கல்வி கற்பவர்களுக்கும் பகுதி நேர தொழில் புரிவோருக்கும் உணவு மற்றும் தங்குமிட வசதி என்பன கியூ.ஐ.பி கம்பஸினால் செய்து தரப்படும்.

இப் புலமைப்பரிசில் திட்டத்திற்கமைய புலமைப்பரிசிலில் சித்தியடைந்தோர்க்கு நியூசிலாந்து, சிங்கப்பூர், ரஷ்யா, உக்ரைன், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி; நிறுவனங்களிலும் கல்வி கற்பதற்கு வாய்ப்பு கிட்டுவதுடன், அங்கு கியூ.ஐ.பி கம்பஸினால் தற்காலிகமாக வழங்கப்பட்ட தொழில் காலம் நிறைவடையும்போது குறிப்பிட்ட நாட்டின் அரச அனுசரணையுடன் தொழில் பெறும் வாய்ப்பும் கிட்டும்.

மேலும் கல்வி நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தில் தாம் பெறும் பெபேறுகளின் தகைமைகளுக்கு அமைவாகொ குறிப்பிட்ட அந்நாட்டின் நிரந்தர தொழில் வாய்ப்பு, மற்றும் அதனூடாக நிரந்தர பிரஜாவுரிமையும் கிட்டும்.

கடந்த சில ஆண்டுகாலமாக இவ்வாறு இப் புலமைப்பரிசில்கள் ஊடாக வெளிநாடு சென்று கல்வி கற்று அந்நாட்டிலேயே தொழில் வாய்ப்புகளையும் பிரஜாவுரிமையும் பெற்றுள்ளவர்கள் பலர். இலங்கையில் கல்வி கற்று வெளிநாடு செல்வோர்க்கு தொழில் அல்லது பிரஜாவுரிமை கிட்டும் வாய்ப்பை விட இப் புலமைப் பரிசில்கள் ஊடாக வெளிநாடு செல்வோர்க்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பும் அவ்வாறே பிரஜாவுரிமையும் இலகுவாகக் கிட்டும்.

இப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தேசிய புலமைப்பரிசில்களும் வழங்கப்படும். ஆனால் அவை கியூ.ஐ.பி கம்பஸ் பாடத் திட்டத்திற்குள் வரையறுக்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் மூலம் கியூ.ஐ.பி கம்பஸ் பாடத்திட்டத்தைப் பயிலுவோரும் விரும்பினால் முதலாவது ஆண்டின் அல்லது இரண்டாம் ஆண்டின் இறுதியில் அப் பாடத் திட்டம் நடைபெறும் குறிப்பிட்ட நாட்டிற்கு சென்று அதை நிறைவு செய்யவும் முடியும். மேலும் தமக்கென ஒரு தொழில் வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும். (த)

**புலமைப்பரிசிலில் சித்தியடைந்து வெளிநாட்டிற்கு சென்று கல்வி கற்பவர்களுக்கும் பகுதி நேர தொழில் புரிவோருக்கும் உணவு மற்றும் தங்குமிட வசதி என்பன கியூ.ஐ.பி கம்பஸினால் செய்து தரப்படும்.**



# மனிபால் வழங்கும் கல்வி அனுகூலங்கள்

தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதிலும் வளர்ந்துவரும் உலக பிரசன்னத்திலும் 60 வருட கால வரலாற்றைக் கொண்டுள்ள மனிபால் குளோபல் எடியுகேசன் குழுமத்தின் அங்கத்துவ அமைப்புகளான மனிபால் சர்வதேச பல்கலைக்கழகம், மெலக்கா மனிபால் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மகோன்னதம் என்பது உண்மையில் ஒரு பாரம்பரியமாகிவிட்டது.

மனிபால் எடியுகேசன் குறூப் இந்தியாவில் மட்டுமன்றி மலேசியா, நேபாளம், டுபாய், அன்ரிகுவா ஆகிய நாடுகளிலுள்ள உலகளாவிய வளாகங்களிலும் ஒரு முன்னணி உயர் கல்வி வழங்குநராக வளர்ந்துள்ளது. 59 நாடுகளைச் சேர்ந்த 400,000க்கும் அதிகமான மாணவர்கள் இக்குழுமப் பல்கலைக்கழகத்திலும் கல்லூரியிலும் இணைந்து உயர்கல்வி கற்று வருகிறார்கள். ஆசியாவில் சில திறமைசாலிகளான கல்விமான்களை மனிபால் எடியுகேசன் குறூப் உருவாக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனிப்பால் குறூப் கல்வியகங்களின் பலத்தை உந்துசக்தியாகக் கொண்டு மனிபால் சர்வதேச பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் அர்த்தபுஷ்டியான சர்வதேச கல்வி உலகளாவிய தொழில்வளத்திற்கு அவர்களை தயார் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

மனிபால் சர்வதேச பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிகளும் விசேடத்துவ திட்டங்களும் உள்ளூர் மற்றும் பிராந்திய தொழில் துறைகளுக்கு பொருத்தமானவையாகும். பொறியியல், விஞ்ஞானம், வணிகக் கல்வி, வணிக நிர்வாகத்தில் டிப்ளோமா, சிவில் பொறியியலில் டிப்ளோமா விஞ்ஞானத்திலும் பொறியியலிலும் 8 இளமாணி பட்டநெறிகள், முகாமைத்துவத்திலும் வணிகத்திலும் 7 இளமானி பட்டநெறிகள் ஆகிய வற்றில் அடிப்படைக் கற்கைகளை மனிபால் சர்வதேச பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

மலேசிய கல்வி அமைச்சு உயிரியல் தொழில்நுட்பத்தில் மகத்தான தொழி துறை நிலையத்திற்கான பங்குடைமையை மனிபால் சர்வதேச பல்கலைக்கழகத்துக்கு வழங்கியுள்ளது. மனிபால் சர்வதேச பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சகல கற்கைநெறிகளும் மலேசிய தகைமைகள் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை அங்கு வழங்கப்படும் கல்வியின் தரத்திற்கும் மேன்மைக்கும் சான்றாகும்.

மலேசியாவில் விரிந்து பரந்திருக்கும் நிலாய் கம்பஸ் அமெரிக்க சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பான எரிசக்தி மற்றும் சுற்றுச் சூழல் வடிவமைப்பு தலைமைத்துவ நிறுவனத்தினால் பிளாட்டினம் சான்றிதழ் (அதி உயர்வானது) வழங்கப்பட்டுள்ளதாக பெருமையுடன் தெரிவித்துள்ளது.

மனிபால் சர்வதேச பல்கலைக் கழகம் வழங்கும் பட்டங்கள் மலேசிய தகைமைகள் அமைப்பு, பொறியியல் அங்கீகார சபை, தொழில்சார் பொறியியல் கல்விப் பட்டங்களுக்கான சர்வதேச அங்கீகார உடன்படிக்கையான வொஷிங்டன் அக்கோட் ஆகியவற்றின் அங்கீகாரத்தை பெற்றுள்ளன.

உறுதியான சர்வதேச கல்விசார் சூழல் காரணமாக மாணவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த சகபாடிகளுடன் வலையமைப்பை ஏற்படுத்திக் கொள் ளும் வாய்ப்பை பெற்றுள்ளார் கள்.

அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்த 30 கல்விப் பங்காளி பல்கலைக்கழகங்களுக்கு மாறிச் செல்லும் விருப்பத் தேர்வையும் மாணவர்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மனிபால் சர்வதேச பல்கலைக்கழகத்தின் உலக தொழில்சார் பங்காளிகள் தெரிவுத் திட்டத்தின் வலையமைப்பின் மூலம் முனைப்பான உள்ளக பயிற்சித் திட்ட அனுபவத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மெலாக்கா மனிபால் மருத்துவக் கல்லூரி மலேசியாவில் மருத்துவக் கல்விக்கு புகழ்பெற்ற ஒரு முதன்மை மருத்துவ கல்லூரியாகும். (த)




# இரண்டாம் வினைத்திறன் காண் தடை பரீட்சை தொடர்பில் திருத்தம்

## அரச முகாமை உதவியாளர் சேவை தொடர்பில்

யாழ்ப்பாணம், ஓக.31

அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை தொடர்பாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் ஆர். எஸ். துரைராஜா திணைக் களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

2004 டிசெம்பர் 24ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1372/23 ஆம் இலக்கம் கொண்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பைத் தழுவி வடமாகாண ஆளுநராக அனுமதிக்கப்பட்ட வடமாகாண முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் 2006 செப்ரெம்பர் 14ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1462/25 ஆம் இலக்கம் கொண்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு திருத்த இலக்கம் I இன் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு இணங்க முகாமை உதவியாளர் சேவை வகுப்பு II இற்கு பதவி உயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வகுப்பு II இற்கான சம்பள அளவுத் திட்டத்தில் 7 ஆவது சம்பளப் படி நிலையை அடைவதற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

> சம்பள அளவுத் திட்டத்தில் 7 ஆவது சம்பளப் படி நிலையை அடைவதற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திய டைதல் வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வினைத்திறன் காண் பரீட்சையானது இரண்டாம் மொழித் தேர்ச்சியில் சித்தியடைவதையே குறிக்கின்றது. கடந்த 2007 ஜூலை முதலாம் திகதியிலிருந்து 2010 ஜூன் 30ஆம் திகதி வரை திறந்த போட்டிப் பரீட்சை அடிப்படையில் நியமனம் பெற்றவர்கள் நியமனத் திகதியிலிருந்து 7 வருடத்துக்குள்ளும், 2010 ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்துக்குள்ளும் குறித்த இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டுமெனவும் பிரதிப் பிரதம செயலாளர் அறிவித்துள்ளார். (வ-9)



# இடித்து வீழ்த்தப்பட்ட நிலையில் மருத்துவமனை சிமெந்துத் திண்ணை

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிவாசலில் இரவுக் கடமையில் ஈடுபடும் பொலிஸார் அமர்வதற்குஅமைக்கப்பட்ட சிமெந்துத்திண்ணை, வாகனம் ஒன்றினால் இடித்து வீழ்த்தப்பட்டது. இதனால் அங்கு இரவுக் கடமைக்கு செல்லும் பொலிஸார் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடந்த 8ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விடுதியில் உள்ள நோயாளியொருவரைப் பார்வையிட அவரது உறவினர்கள் வாகனமொன்றில் வந்திருந்தனர். அவர்கள் பயணித்த வாகனம் மோதி குறிப்பிட்ட சிமெந்துத் திண்ணை இடிந்து வீழ்ந்துள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்து பார்வையிட்ட போது வாகனத்தில் வந்தவர்கள் தாம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு செல்வதாகவும் திரும்பி வந்து அதனை மீளமைத்துத் தருவதாகவும் கூறிவிட்டுச் சென்றனர். எனினும், மூன்று வாரங் களாகியும் இதுவரை குறித்த வாகனச் சொந்தக்காரர் அதனை புனரமைத்து வழங்காததால் இந்த விடயத்தை மருத்துவமனை நிர்வாகம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. குறித்த வாக னச் சொந்தக்காரர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்காதமைக்கான விளக்கம் கோரி குறித்து பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிக்கு மேலிடத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


ட்ரய்வ் க்றீன் மூலம் மேற்கொண்டு
தேவையற்ற முறையில் எரிபொருளுக்காக
செலவழிக்கின்ற பெருமளவு பணத்தினை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்

இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் கிறீன் மூலம் செய்து எரிபொருள் செயல்திறன் பற்றி அறிந்து கொள்ளுங்கள். பணத்தினை சேமிக்க ஆரம்பியுங்கள். வாகனத்தின் எரிபொருள் செயல்திறன் பற்றிய தரவுகளை ட்ரய்வ் கிறீன் புகை பரிசோதனையொன்றின் மூலமே உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.
நீங்களும் இன்றே ட்ரய்வ் கிறீன் இற்கு சென்று உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை மேற்கொண்டு அதன் மூலம் பெறுகின்ற தரவுகளை பயன்படுத்தி உங்கள் வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைப்படி செய்து எரிபொருள் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளுங்கள்.
பண விரையத்தினை குறைத்துக் கொள்ளுங்கள்

இத்தரவுகள் ட்ரய்வ் கிறீன் இடமிருந்து இலவசம்

எரிபொருள் விரயம் பற்றிய தரவுகள்

பராமரிப்புக்கான எளிய வழிகாட்டல்கள்



drivegreen

நாடு முழுவதும் உள்ள ட்ரய்வ் க்றீன் கிளைகளுக்கு சமுகமளியுங்கள். அல்லது உங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள ட்ரய்வ் க்றீன் நிலையத்தின் தகவல்களை பெற தொடர்புகொள்ளுங்கள்.

உடனடி அழைப்புக்கு: 0117 444 444

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பெற்றோல் வாகனங்களுக்காக மட்டுமே.

(50760)



தமது புகைப்படங்களை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு ▸

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு நடாத்தும்

Women and Media Collective

பெண்களின் புகைப்படக் கண்காட்சி 2014

தொனிப்பொருள்: "பணிபுரியும் பெண்கள்"

இறுதித் திகதி: 2014, ஐப்பசி 01

C/15867

மேலதிக தகவல்களுக்கு விஜயம் செய்யுங்கள்: www.womenandmedia.org
தொடர்பு கொள்ளுங்கள்: 2690192 மற்றும் 5632045 அல்லது
மின்னஞ்சல் செய்யுங்கள்: photography.wmc@gmail.com





குழந்தை பிரசவம்

தற்போது

எந்தவொரு குழந்தை பிரசவத்தையும் பரவசப்படுத்துகிறது

HNB பத்தும் விமன ரிவோட்ஸ்

தற்போது HNB பத்தும் விமன ரிவோட்ஸில் புதிய பல ரிவோட்ஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

முதல் குழந்தைக்கு மட்டுமல்ல எந்தவொரு குழந்தை பிரசவத்திற்கும் HNB பத்தும் விமன ரிவோட்ஸ் பரவசமாய் கிடைக்கவிருக்கின்றது.

HNB பத்தும் விமன ரிவோட்ஸ்

உங்கள் HNB கணக்கின் நிலுவை ரூ.10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருப்பின் உங்கள் வாழ்வுடன் தொடர்புடைய நிகழ்வுகளுக்கு உங்கள் கணக்கின் மிகுதிக்கேற்ப ரூ.50,000 வரையிலான பணப்பரிசு கிடைக்கவிருக்கிறது.
(எந்தவொரு குழந்தையின் பிரசவம்,உங்கள் குழந்தை முதல் வகுப்பிற்கு செல்லும் முதல் நாள்,பல்கலைக்கழக பட்டம், திருமணம், 10வது திருமண ஆண்டு, 21 வது பிறந்த தினம், 55 வது பிறந்த தினம், வைத்திசாலையில் அனுமதிக்கையில்)

அது மட்டுமல்ல.உங்கள் கணக்கின் நிலுவைக்கு ஏற்ப கவர்ச்சிகரமான வட்டியும் உண்டு.

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்துடன் அல்லது கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

HNB PATHUM VIMANA ரிவோட்ஸ் 2014
அனைவருக்கும் பரிசுகள்

எம்மை பின்தொடருங்கள்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

C/15862

HNB தலைமையகம், HNB டவர்ஸ், 19வது மாடி, 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
தொ.பேசி: 0112 661959 / 0112 661974 / 0112 661946 தொலை நகல்: 0112 664892
மின்னஞ்சல்: pathumvi@hnb.lk வெப்தளம்: www.hnb.net

HNB

Apply Now for Feb '15 intake



ஆஸ்திரேலிய பல்கலைக்கழக பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்தியுங்கள்

Date : 8th September
Venue : IIS City Campus
Time : 10am- 2pm

*You have the opportunity to meet University & Edlocate representatives for 15 minutes together with Tamil speaking counselors to learn about:*

- Studying in Australia in one of the 21 Universities
- Studying in UK, New Zealand, Malaysia & Singapore
- Post Study Work Visa and PR possibilities in Australia

Students with good A/L results are eligible for scholarships
You can lodge applications with pending A/L results

நாம் வழங்கும் ஒரு சிறப்பு சலுகை, உங்களை IELTS பரீட்சையில் சித்தி பெற வழிகாட்டுவது

மாணவர்களையும் பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கின்றோம் இந்த நேரடி இலவச கலந்துரையாடல் அமர்வுக்கு

edlocate
www.edlocate.lk
FOLLOW US ON

IIS CITY CAMPUS
IIS Study Abroad Centre 100, Clock Tower Road, Jaffna.

Call
021 222 8060 / 021 222 2831
for appointments

## இவ்வருட வாசிப்பு மாத செயற்றிட்டங்களை 10 ஆவது வருட பூர்த்தி நிகழ்வாக நடத்துக

### தேசிய நூலக ஆவணமாக்கல் சபைத் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் பொதுநூலகங்களில் இந்த வருடத் தேசிய வாசிப்பு மாதச் செயற்றிட்டங்களை பத்தாவது ஆண்டு பூர்த்தி நிகழ்வுகளாக நடத்துமாறு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் தலைவர் பேராசிரியர் சோமரத்ன பாலசூரிய சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஒக்ரோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு வருடம் தோறும் நூலகம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தி வருகிறது.

> 2014 ஆம் ஆண்டு பத்தாவது ஆண்டு பூர்த்தி யாவதை முன்னிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடத்தவுள்ள தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவாக நடத்துமாறு அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் பத்தாவது ஆண்டு இந்த ஆண்டில் பூர்த்தியாவதை கருத்தில் கொண்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடத்தவுள்ள தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவாக நடத்துமாறு ஆவணமாக்கல் சபையின் தலைவர் அறிவித்துள்ளார். 'அறிவு நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் வாசிப்புப் பழக்கத்தை மக்கள் மத்தியில் அதிகரிக்க வைக்கும் பொருட்டு பல விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும், மக்களின் வாசிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்தல், நூலக வளங்கள் மற்றும் சேவைகளை நவீன மயப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களை குறிக்கோளாகக் கொண்டு செயற்படுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

நூலகங்களில் செயற்படும் நூலக அபிவிருத்திக்குழு, வாசகர் வட்டம் ஆகியவற்றுடன் இணைந்து விழா தொடர்பான செயற் குழுவை உருவாக்குமாறும் இந்தக் குழுவில் நிறுவனத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் குழுவின் தலைவராகவும், உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது நிறுவனச் செயலாளர் குழுவின் உப தலைவராகவும், நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் - குழுவின் செயலாளராகவும், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிறுவனத் தலைவரால் பரிந்துரை செய்யப்படும் மூன்று அங்கத்தவர்கள் செயற்குழுவில் இருப்பர் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)




சகல
HYBRID
வாகனங்களுக்கும் அதிசிறந்த குத்தகை வசதி
அல்ஃபலாஹ் வழங்கும் விசேட இஜாரா குத்தகை சேவை

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

0115 500 786

الفلاح
AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES

# எப்போது திருத்தப்படும் பரு.- மருதங்கேணி வீதி

மருதங்கேணி,ஒக.31

பருத்தித்துறை- மருதங்கேணி வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையால் அந்த வீதியால் பயணம் செய்யும் அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் அசௌகரி யங்களை எதிர்நோக்கி வருகின்ற னர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சுமார் 30 கிலோமீற்றர் வீதியே நீண்டகாலமாக திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மருதங்கேணி பிரதேச செயலகம், மருத்துவமனைப் பிரதேச சபை உப அலுவலகம், கோட்டக் கல்விப் பணிமனை மற்றும் பாடசாலைகள் என்பவற்றுக்குப் பெரும்பாலான அலுவலர்கள், ஆசிரியர்கள் , மாணவர்கள் உட்பட அனைவரும் குறித்த வீதியே பிரதான போக்குவரத்து மார்க்கமாகக் காணப்படுகின்றது. எனவே அந்த வீதி புனரமைக் கப்படாமையால் விபத்துக்களை எதிர் கொள்வதுடன் பல்வேறு அசௌ கரியங்களையும் நோக்கி வருகின் றனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், தனியார் பஸ் என்பன பயணிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்ற போதும் வீதி சீரில்லாத காரணத்தால் அவையும் சீரான சேவையை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன் அடிக்கடி வீதிகளில் பழுதடைந்து நிற்பதாகவும் இதனால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிய வருகின்றது. இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் பருத்தித்துறை பிரதேச சபையோ, வடமாகாண சபை உறுப்பினர்களோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

எனவே இந்த வீதியால் பயணம் செய்யும் பயணிகளின் நலன் கருதி உடன் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-108)

# வரணி மருத்துவமனைக்கு பல் சிகிச்சை நிலையம்

## வேள்ட் விசன் அமைத்துக் கொடுக்கும்

வரணிப் பிரதேச வைத்தியசாலையில் கடந்த வாரம் 'வேள்ட் விசன்' நிறுவனப் பிரதிநிதிகளுக்கும், பிரதேச வைத்தியசாலை வைத்தியர்கள், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின ருக்கும் இடையிலான கலந்துரையா டல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த மருத்துவமனைக்கு பல் வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்க 'வேள்ட் விசன்' நிறுவனம் முன்வந்துள்ளது.

**குறித்த மருத்துவமனைக்கு பல் வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்க 'வேள்ட் விஷன்' நிறுவனம் முன்வந்துள்ளது.**

வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி வீ.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் குறித்த நிறு வன பிரதிநிதிகளான எஸ். றொசய்றோ மற்றும் சாவகச்சேரி பிரதேசத்துக்குப் பொறுப்பான திட்ட அலுவலர் வி.நெசினோல்ட் ஆகியோர் திட்ட செயற்பாடு கள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (வ-122)









எனக்கு ஸ்கூட்டர் ஓன்று வாங்கி ஓட்டுவதற்கு ஆசையாக இருந்தது ஆனால் பயம் ஓருபக்கம். ஆனால் நான் ஹென்டா ஸ்கூட்டரை விரும்பினேன் அதில் கொம்பி பிரேக் தொழில்நுட்பம் இருப்பதனால். நான் ஹென்டா Activa i ஸ்கூட்டரை வாங்கினேன். நான் இப்பொழது ஸ்கூட்டரினை விருப்பம்போல் ஓட்டுகின்றேன் எந்தவொரு பயமுமில்லாமல். அதன் பிரேக் சரளமாகக் கையாளக்கூடியதாய் உள்ளது மற்றும் நிறைகுறைவாக இருப்பதால் இலகுவாய் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். நான் Activa i ஸ்கூட்டரினை விருப்புகின்றேன்.

நான் ஹென்டா Activa i Ride & Win போட்டியில் பங்குகொண்டு அதன் மூலம் என்னுடைய Activa i ஸ்கூட்டர் 71km துாரம் ஒருலீற்றரில் பயணிக்கலாம் என்பதினை அறிந்துக்கொன்டேன். என்னுடைய தெரிவு சரியானது.

புஸ்பா விஜயசிங்க
மாஹறாவ

Activa i RIDE & WIN!

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10. தொ: 011-7607200
மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-7607200

Rs. 178,125 + VAT

C/15865

# சிதைவடையும் கலாசாரத்தை மீட்பதற்கு பண்பாட்டு மறுமலர்ச்சி அவசியம்

## அருட்தந்தை றோய் பேடினன் கருத்து

சங்கானை, ஓக. 31

சமகாலச் சூழலில் எமது இனத்தின் பண்பாடு - கலாசாரங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் இருந்து எமது இனத்தவர்களை ஒட்டு மொத்தமாக மீட்பதற்கு, பண்பாட்டு மறுமலர்ச்சி மிக அவசியமாகத் தேவைப்படுகிறது என அருட்தந்தை றோய் பேடினன் தெரிவித்தார்.



ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவன கலாசார எழுச்சிக் குழுவினரால், யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரின் வழிகாட்டலில் "மாறுவோம் - மாற்றுவோம்' என்ற வீதி நாடகம் அண்மையில் புனித அந்தோனியார் தேவாலய முன்றிலில், உதவிப் பிரதேச செயலர் தனிஷ்கா வசந்தராஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறான வீதி நாடகங்களை முக்கிய இடங்களில் அரங்கேற்ற வேண்டும். இவ்வாறான நிகழ்வுகள் சமூக விழிப்புணர்வை நோக்கி நகர வேண்டியது இன்றைய கால கட்டத்தின் தேவையாகவுள்ளது. அன்றாடம் எமது சமூகத்தில், சமூக விரோதச் செயல்கள் பெருமளவில் இடம்பெற்று வருகின்றன. மேலும், போதைப் பொருள் பாவனைப்பழக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றது. பொருத்தமற்ற இளவயதுத் திருமணங்கள், குடும்ப வன் முறைகள், பதின்ம வயதுச் சிறார் கள் மீதான வன்புணர்வுகள் அதிகரித்து வருகின்றன. தட்டிக்கேட்க யாரும் இல்லை நிலை மிக மோசமானது. நாம் அனைவரும் ஒன்று பட வேண்டும். ஒற்றுமையுடன் எமது சமூகத்தை விழிப்படையச் செய்ய வேண்டும் - என்றார். (வ-29)

> சமூக விழிப் புணர்வை நோக்கி நகர வேண்டியது இன்றைய கால கட்டத்தின் தேவையாக வுள்ளது.







தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் தங்கி வாழ்ந்து வரும் சுமார் 50 ஆண். பெண் முதியவர்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரமத் தின் சார்பில் உடுபுடைவைகளை ஆச்சிரம பொறுப் பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் வழங்கு வதையும், உடுபுடவைகளைப் பெற்றுக் கொண்ட சில முதியவர்களையும் காணலாம். (ஒ-173)



நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழாக் காலத்தில் பெரிய புராணம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய பண்டிதர் பொன்.சுகந்தனுக்கு கோயில் பிரதம குரு 'சொல்லின் செல்வர்' என்னும் பட்டம் வழங்கிக் கௌர வித்த போது... (ஒ-173)



வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணி பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் ஆலய மகோற்சவத்தின் கொடியேற்ற நிகழ்வு





திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் "ஆக்கபூர்வ கற்றலுக்கான சுதந்திரம்" என்ற தொனிப் பொருளில் ஆங்கில மொழி மூலம் முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக, கொழும்பு சர்வதேச சிறார் ஆங்கிலப் பாடசாலை முகாமையாளர் எஸ்.ஜெ. ஜெயசிங்க கலந்து கொண்டு உரையாற் றுவதையும், பங்கு கொண்ட சிறார்கள் சுதந்திரமான கற்றலில் ஈடுபடுவதையும் காணலாம். (ஒ-29)



லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது மாவட்ட ஆளுநராகப் பதவியேற்ற வைத்திய கலாநிதி வை.தியாகராசாவுக்கு அண்மையில் கோப்பாய் பிரதேச மக்கள் வழங்கிய வரவேற்பு நிகழ்வில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதைக் காணலாம். (ஒ-7)



வண். வடமேற்கு நொச்சியம்பதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கான புதிய சித்திரத் தேரை வடிவ மைத்த திருநெல்வேலி கலைக் கூட ஸ்பதியார் விஸ்வப் பிரம்மஸ்ரீ நடராசா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார், ஆலய தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் இ.ஆனந்தராஜாவினால் 'சிற்பரசன்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக் கப்படுவதைப் படத்தில் காணலாம். (ஒ-421)







சங்கானை லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டின் தலைவராக, திருமதி சந்திரகாந்தன் தவ ஆனந்தி தெரிவு செய்யப்பட்டார். இவரது பதவியேற்பு வைபவம் அண்மை யில் சங்கானை நிகரை வைரவர் ஆலய முன்றிலில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி1 இற்கான உப ஆளுநர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா பதவிப் பிரமாணச் சான்றிதழை வழங்குவதையும் சிறுவர்களுக்கான அன்பளிப்பு பொருள்களை வழங்குவதையும் காணலாம். (ஒ-29)



சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வணிக மன்றத்தின் "இந்து வணிகன்" சஞ் சிகை வெளியீட்டு நிகழ் வில் முதன்மை விருந் தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் ந.சர் வேஸ்வரன் சஞ்சி கையை வெளி யிட்டு வைக்க மக்கள் வங்கி யின் சாவகச்சேரி கிளை யின் ஓய்வு நிலை முகா மையாளர் க.சண்முக லிங்கம் பெற்றுக் கொள் வதைக்காணலாம். (ஒ-9)



பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற வரலட்சுமி விரத நிகழ்வின் போது... (ஓ-18)



தாவடி அம்பலவாணேஸ்வர முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவின் போது... (ஓ-86)



குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித இராயப்பர் சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலியின் போது... (ஓ-51)







மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா வரிசையில் தேர்த் திருவிழாவின் போது இலங்கை தமிழரசுக் கட்சியின் தண்ணீர்ப் பந்தல் ஆலய தெற்கு வீதியில் அமைக்கப்பட்டு அடியார்களுக்கு தாக சாந்தி வழங்கப்பட்டது. (ஓ-9)



தமிழ்முற்றம் மாதாந்த சஞ்சிகையின் முதல் வெளியீடு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் எழுத்தாளர் ஜோசப்பாலா தலைமையில் இடம்பெற்றது. முதற்பிரதியை மூத்த கலைஞர் அரசய்யா வெளியிட்டு வைக்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பெற்றுக் கொண்டார். ஆசிரியர் விஜேந்திரனும் காணப்படுகிறார். (ஓ-135)



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 75 வருட நிறைவு தின நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்ற போது இலங்கை தொழிலாளர் காங்கரஸின் உப தலைவர் எஸ்.மாரிமுத்து 75 ஆவது வருடத்தை சிறப்பிக்கும் வண்ணம் கேக்கை வெட்டுவதையும் அருகில் வவுனியா நகர கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.பி.நடராஜ் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (ஓ-421)






கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய "சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி மாணவர்களின் மெய்வன்மை நிகழ்வு இறைவணக்கத்துடன் ஆரம்பமாவதையும். மாணவர்களின் உடற்பயிற்சிக் காட்சியையும் காணலாம். (ஓ)



வல்லை ஆதிசக்தி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் அதன் தலைவர் த.பரமானந்தராசா மங்கல விளக்கேற்றுவதையும். சிறார்களின் ஓட்டப் போட்டியையும் காணலாம். (ஓ)



# திருநெல்வேலி வடக்கு, முருகன் வீதி, புவனயம்பதி
# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
## நூதன பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ அஷ்ட பந்தன
# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா - 2014

## பெருவாழ்வு வாழ்க

சீதலேத்துவம் ஜெகன் மாதா
சீதலேத்துவம் ஜெகத் பிதா
சீதலேத்துவம் ஜெகத் தாத்திரிம்
சிதலாயே நாமோ நமஹ

ஆத்ம ஈடேற்றத்துக்கும் வீடுபேற்றுக்கும் வழியாய் அமையும் ஆலய தரிசன வகையிலே கோயில் தொண்டு எழுந்தருளி உலகத்தைக் காத்தருளும் அன்னை லலிதா ரூபமாக விளங்கும் புவனயம்பதி அருள் மிகு புவனேஸ்வரி அம்பாளின் ஆலயத்தில் இன்று திருக்குடமுழுக்கு பெருஞ் சாந்தி வைபவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே தன்னை நாடி வந்து திருமலர் பாதம் கண்டு வழிபட்டவர்களும் மனதால் நினைந்தோருக்கும் வேண்டிய தெல்லாம் நல்கும் அன்னையின் திருவருட் கடாட்சம் கிடைத்து அனைத்து செல்வங்களுடனும் பெருவாழ்வு வாழ தேவியின் பாதம் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

ஆலய பிரதமகுரு
இ.கிருஷ்ணமூர்த்திகுருக்கள்.

## கும்பாபிஷேகம் சிறப்புற பிரார்த்திக்கின்றேன்.

இலங்கை சிவபூமி எனும் மேன்மையுடையது. சைவசமய மேன்மையுள் சக்தி வழிபாடும் உயர்வு பெறுகின்றது. சிவப்பரம் பொருளின் சக்தியாக விளங்கும் பெண்தெய்வம் புவனேஸ்வரி ஆகும்.

புவனேஸ்வரி அம்பாளுக்குரிய தனித்துவம் மிக்க ஆலயங்கள் பல சிவாகம மரபில் அமைக்கப்பெற்றும் நித்திய, நைமித்திய வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றும் வரும் மரபுடையன. சிவாகம மரபில் புதிதாக மீள் நிர்மாணிக்கப்பட்ட ஆலயமாக திருநெல்வேலி புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் விளங்கு கின்றது.

இலங்கையின் சைவசமய வரலாற்றில் திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாச முனிவர் முதன்மையானவர். இந்த மரபில் திருநெல்வேலி வடக்கு முருகன் வீதி, புவனயம்பதியில் அருளாட்சி செய்யும் தெய்வமாக விளங்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு பெருஞ்சாந்தி நிகழவிருப்பது தெய்வத் திருவருளேயாகும். திருஞானசம்பந்தர் "பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்று பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகத்தின் மாட்சிமையை எடுத்துக் காட்டுகின்றார்.

திருக்கோயில் வழிபாட்டின் மேன்மைகளையும் முறைமைகளையும் சிவாக மங்கள் கூறி நிற்கின்றன. இந்த மரபில் சைவத் திருப்பணியின் மேன்மைகளை சைவாகம நூல்கள் சிவபுண்ணிய மேன்மையாக எடுத்துக் கூறுகின்றன. இந்த மரபில் அம்பிகை அடியவர்களின் சைவ புண்ணிய கைங்கரியத்தின் மேன்மையால் திருப்பணிகள் நடைபெற்று நவகுண்ட பக்ஷமாக விநாயகர் முதலான பரிவார மூர்த்திகள் புதுப் பொலிவுடன் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது இந்த ஆலய வரலாற்றில் ஓர் மைல்கல்லாகும்.

யாழ்ப்பாணத்து சைவ சமய மரபில் சிவாகமக் கிரியைகளும் கிரியை மரபின் உள்ளார்த்தமாக் சிவஞானம் கைவரப் பெறுதலும் சைவவிரதம் தீர்த்தமாடல் மற்றும் சிவபுண்ணியக் கைங்கரியங்களை வளர்த்தல், மேம்படுத்தல் என்பன மரபாகப் பேணப்பட்டு வருகின்றன. இந்த மரபில் இந்த ஆலயத் திருப்பணியும்

கும்பாபிஷேகக் கிரியை மரபும் உரைக்கல்லாக அமைகின்றன.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் தெய்வ சாந்நித்தியம் மேன்மை பெற்று உலகெங்கும் பரவுவதுடன் அம்பாளின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சுபம்.

சி.ரமணராஜா
விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை.

## அம்பாளின் அருள் கிட்டட்டும்

புவனயம்பதி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான நூதன பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக நாளான இன்று எழுபத்தைந்து வருடங்கள் பின்நோக்கி மீட்டுப் பார்க்கிறேன். 1940 ஆம் ஆண்டு இந்த புண்ணிய பூமியில் கணபதி மாணிக்கம் என்பவரால் வேப்பமர நிழலில் சிறியதொரு கோயிலாக அமைக்கப்பட்டது. அந்தக் கோயிலில் ஒரு காலப் பூசையாக நா.சின்னராசு என்பவர் விளக்கிட்டு பூசை செய்து வந்தார். பெரும் பூசைகளை க. மாணிக்கம் என்பவர் செய்து வந்தார். கோயிலில் பல அற்புதங்கள் நிறைந்து காட்சிதர மக்கள் ஒன்றுகூடி புவனேஸ்வரி அம்பாள் என்று பெயர் சூட்டி பின்நாளின் இந்த இடத்துக்கு மகா வித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் புவனயம்பதி என பெயரும் சூட்டியுள்ளார். முன்னோர்களின் எண்ணக் கனவுகள் நிறைவாகி இன்று அம்பாளின் ஆலயம் புதுப்பொலிவுடன் சகல வளங்களுடனும் சகல மக்களின் நிதிப்பங்களிப்பு, ஒத்துழைப்புடனும் இன்று மஹா கும்பாபிஷேகம் காண்கின்ற இந்த நாளில் அம்பாளின் அருளாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

அல்வாயூர் கவிஞர்-சிவகணேசன்.

## பதினாறு பேறுகளும் கிடைக்கட்டும்

திருநெல்வேலி வடக்கு முருகன் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் அழகிய சிற்ப வேலைபாடுகளுடன் உயர்ந்து நிற்கிறது. மெய்யடியார்கள் இந்த ஆலயத்திலே கண்ணீர்வார மெய்மயிர்சிலிர்ப்ப நின்று வழிபடுவதை அடியேன் பல தடவை பார்த்திருக்கின்றேன்.

வேண்டியதை வேண்டியாங்கு அருளும் அன்னை புவனேஸ்வரியின் அடியார்கள் ஒன்றுகூடி இந்த ஆலயத் திருப்பணியை நிறைவு செய்திருக்கிறார்கள். பக்தி பணிவு பஜனை முதலான இறையுணர்வுச் சுகானுப வங்களை இந்த ஆலயத்திலே தினமும் காணலாம்.

திருநெல்வேலி ஒரு புண்ணிய பூமி நீர்வளமும், நிலவளமும் சிறந்த இந்தப் பதியிலே வாழும் மக்கள் மனவளம் நிறைந்தவர்கள். சைவமும் தமிழும் செழித்தோங்கிய இந்தப் பூமியிலே பார்க்குமிடமெங்கும் சைவாலயங்கள் நீக்கமற நிலைத்துக் காணப்படுவது இங்கு வாழும் அடியவர்களின் பக்தி வைராக்கியத்தினையே எடுத்துக் காட்டுகின்றது.

தங்கள் உழைப்பின் ஒரு பகுதியைத் தருமத்துக்கும் கடவுளுக்கும் என்று சேமித்து வைத்துச் செயற்படும் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் சாட்சியாக அன்னை புவனேஸ்வரியின் அழகிய ஆலயம் காணப்படுகின்றது.

உள்ளத்தால் உயர்ந்த மெய்யடியார்களின் அர்ப்பணிப்பான சிந்தனையால் செயற்பாட்டால் இன்று இந்த ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

"புல்லினால் ஒன்று கோடி புதுமண்ணாற் பத்துக்கோடி
செல்லுமாங் காலந் தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லினாய் குழலாய் கேளாய் ஆலயம் அடங்கற்கெல்லாம்
கல்லினாற் சமைத்தபேர்கள் கைலை விட்டகலாரன்றோ"

என்று ஒரு பழம் பாடல் உண்டு. இந்த ஆலயத்தைச் செவ்வனே திருப்பணி செய்து நிறைவேற்றி இருக்கும் மெய்யடியார்கள் கலையாத கல்வியும் குலையாத செல்வமும் எனவரும் பதினாறு பேறுகளும் பெற்றுய்ய வேண்டுமென்று எல்லாம்வல்ல அன்னை புவனேஸ்வரியின் பாதங்களைப் பணிவோமாக.

அன்புடனும் வாழ்த்துக்களுடனும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

## கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்தும் வர்த்தக பெருமக்கள்



S.P.N. நல்லைக் கந்தன்
ட்ரான்ஸ்போட் திருநெல்வேலி.

கபில் சைவ உணவகம்
திருநெல்வேலி.

ஜீவன் சைவ உணவகம்
திருநெல்வேலி.

நிசாந்தன் களஞ்சியம்
திருநெல்வேலி.

சூரி ஹாட் வெயார்
திருநெல்வேலி.

தேவா மாபிள்ஸ்
திருநெல்வேலி.

க. சிவராசா கட்டட
நிர்மாணிப்பாளர்
இணுவில்.

ரவி ஆட்ஸ்
குழுவினர்

பாஸ்கரன் சவுண்ட்ஸ்
புத்தூர்.

கௌதம் ஹாட்வெயார்
புத்தூர்.

ஹரிகா தையலகம்
திருநெல்வேலி

விஜய் சில்க்
யாழ்ப்பாணம்

முத்தொளி வீடியோ
கோண்டாவில்

Six Boys
திருநெல்வேலி

சிவராசா திபாகரன்
பலசரக்குக் கடை

வர்த்தகர்கள்:

| | |
|---|---|
| செ.தர்மராசா | ஜெயக்குமார் |
| சி.மனோகரராசா | ஜெயந்தன் |
| க. மகேந்திரராசா | பாலராசா |
| பொ.நிர்மலரூபன் | பிரகாஸ் குழு |
| மயூரேசன் | பதி |
| பாஸ்கரன் நிமால் | மு.பாலசிங்கம் |
| ரமேஸ் | குமார், ஜீவானந்தன் |

திருநெல்வேலி:
கு. கணேசலிங்கம் - கோண்டாவில்

க. சுந்தரலிங்கம் (கனடா) சி. சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி)
மா. யோகராசா (சுவிஸ்) க. கலியுகன் (சுவிஸ்)
பொ.நிர்மல விஜி (சுவிஸ்)

மதி பலசரக்கு கடை - திருநெல்வேலி.

**தேவை**

வெள்ளவத்தையில் உள்ள Wine Shopற்கு வேலை ஆள்கள் தேவை. G.C.E (A/L) படித்த, Computer தெரிந்த, 22 - 25 வயது வரை உள்ள திருமணமாகாத ஆண் தேவை. நேர்முகத் தெரிவு 01.09.2014, 03.09.2014

No.58, Harmeis Avenue, Wellawatte
(வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகில்)
011 250 3552/011 236 1242/011 236 0243

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவர் 1,500/= நால்வர் 2,500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte.
T.P 072 255 2222 (Г/15793) (4.6.3)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General — We do Official Online Registration for Exam Candidates — Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது (C/15623)(7.3) Duration: (2 Months)

01/09/2014 @ 9.00am | 03/09/2014 @ 9.00am | 05/09/2014 @ 3.00pm | 06/09/2014 @ 8.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

# மேலதிக மொழி விருத்திக் கற்கை நெறி

தேசிய கல்வி நிறுவகத்தால் மேலதிக மொழி (ஆங்கிலம்/சிங்களம்) விருத்திபயிற்சிநெறிக் கான விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி மட்டம் I, II என இரு பிரிவுகளாக நடத்தப் படவுள்ளது. மட்டம் I க்கு திறந்த பயிற்சி மூல மும் மட்டம் II க்கு அனுமதிப் பரீட்சை மூலமும் விண்ணப் பதாரிகள் தெரிவு செய் யப்படுவர்.


இந்தப்பயிற்சிநெறிக்கு கல்வி சார் அரச ஆசி ரியர்கள், அதிபர்கள், அலுவலர்கள்இணைத் துக் கொள்ளப்படுவர். விண்ணப்பங்களை எதிர்வரும் 2 ஆம் திக திக்குமுன்னர்இணைப் பாளர், ஏ.எல்.ஐ.சி. மத் திய கல்லூரி அல்லது தேசிய கல்வி நிறுவ கம், மகரகம என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட தேசிய கல்வி நிறுவக இணைப்பா ளர் அறிவித்துள்ளார். மேலதிக விவரங்க ளுக்கு11/08/2014ஆம் திகதிய வர்த்தமானி யைப் பார்வையிட லாம். (வ)

**வீடு வாடகைக்கு**

இல.55, பலாலி வீதி, கந்தர்மடத்தில் நிறுவனங்கள் அல்லது களஞ்சியங்களுக்கு உகந்த வீடு வாடகைக்குண்டு.
(51532) (4.6.3) தொடர்பு:077 755 8340

**காணி விற்பனை**

தாச்சை சீமா பெரியவிளான் 12 பரப்பு 5 குழி காணி விற்பனைக்குண்டு. இது மூன்று துண்டுகளாகப் பிரிக்கப் பட்டு படத்தில் காட்டப்பட்டவாறு உங்கள் விருப்பத்தின்படி பிரித்துத் தரப்படும்.




(51533) (12.3.6)

பெரியவிளான் சந்தியில் இருந்து 100மீற்றர் தூரத்தில் கீரிமலை, இளவாலை வீதியில் அமைந்துள்ளது

077 575 8601/077 637 9252

**வேலை வாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளும் முதல் தர நிறுவனம் ஒன்றுக்கு துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) நிதித் திட்டமிடலாளர் / ஆலோசகர் (06 வெற்றிடம்)
2) குழு முகாமையாளர் (04 வெற்றிடம்) - குறைந்தது 6 மாதம் துறை சார்ந்த அனுபவம் தேவை.

தகைமை:
- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- க.பொ.த. (சா/த) இல் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தி.

கொடுப்பனவு:
- சம்பளம் (நேர்முகத் தேர்வின்போது தொகை தீர்மானிக்கப்படும்)
- தரகு (Commission)
- மாதாந்த சலுகைகள் (Incentives).
- வாகனக் கடன்

ஆர்வலர்கள் அனைவரும் தமது விண்ணப்பங்களை 09.09.2014இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 5009, C/O உதயன்,
இல.361, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
(49757) (12.3)

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**
**திருமஞ்சத் திருவிழா**



காலம் : நாளை 01.09.2014 திங்கட்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி சாயரட்சைப் பூசை
மாலை 4.30 மணி ஸ்தம்ப பூசை
மாலை 5.30 மணி வசந்த மண்டப பூசை
மாலை 6.00 மணி திருமஞ்சம் திருவீதி வலம்

அம்பாள் திருமஞ்சத்தில் வரும் திருக்காட்சியைத் தரிசித்து நல்லருள் பெறுவீராக.

திருமஞ்சத் திருவிழா உபயகாரர்

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(C/15620)(7.3)

**LED**

1W LED Bulb Rs.12/=
Surface Mounted LED Panel light 12W Rs.1750/= 18W Rs.1950/=
Led Panel Light 3w Rs.490/= | 6w Rs.990/= 12w Rs.1450/= | 18w Rs.1750/=
Metal 3W Rs220/= 5W Rs300/= 7W Rs400/= 9W Rs600/=
Led Tube 1metre Rs490/=
LED Tube 4 ft 18w Rs.890/=
100W LED Rs.6750/=
LED Rotating Buld Rs.490/=
Led Strip 5m Rs1650
25W Led Celing Light Rs 5950/=
PLASTICS LED BULB
3W - Rs.150/=
5W - Rs.250/=
7W - Rs.280/=
9W - Rs.360/=
12W - Rs.420/=
15W - Rs550/=
18W - Rs750/=
16x96-pixels
LED NAME BOARD 6"-36" RS8500

KINGS ELECTRONICS
11A, STANLEY ROAD, JAFFNA.
TEL NO : 021 2223857
WWW.KINGSELECTRONICS.LK

**கண்டி மடவளையில் பெண்களுக்கான ஒரு கல்லூரி**

மூன்று (ISO) அங்கீகாரம் பெற்ற சர்வதேச சான்றிதழ்களுடன் ஐந்து சான்றிதழ்கள்

Emerald Ladies College
An Excellent Guidance for your Successful future

எமது கற்கை நெறி
- English Language Training Courses (Speciality)
- Computer Training Courses
- Life Skill Training Courses
- Counseling & psychology
- Nursing ,Patient Care & Basic First Aid
- Principles of Human Nutrition and Hazard

மேலும் பல
- Cookery course
- Basic Law & Family Law
- Glossary Of Sewing
- Language & Secretarial Courses
- Human Development courses
- Self Employment Courses

ஒரு பிரிவுக்கு 34 மாணவிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்

4 மாத கால வதிவிட வசதியுடன் கூடிய பாடநெறிகள்
English & Life Skills
Course Fee Only Rs. 7000 Per Month

பாதுகாப்பான சூழல், சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறை பல்கலைக்கழக துறைசார் நிபுணர்களின் வழிகாட்டல், பாடத்திட்டம்

Apply NOW

பாடநெறி ஆரம்பம் 2014 செப்டம்பர் 18

பதிவுகளுக்கு 0777 78 52 40

#26 | Sirimalwatta Road | Madawala Bazaar | Kandy
| 081 2050600 | 0777 717129 | emeraldladiescollege@gmail.com

Emerald Ladies College — வெற்றிகரமான எதிர்காலத்திற்கு சிறந்ததோர் வழிகாட்டி

**கடை வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில் (கச்சேரிக்கு மிக அருகில்) 26'x15' அளவுடைய கடை வாடகைக்குண்டு.
(51528) (4.6.3) தொடர்பு:077 356 5059

**விற்பனைக்கு**

மருந்துக்கடைகள் மற்றும் கடை களுக்கு பயன்படுத்தக்கூடிய கண் ணாடி சோகேஸ் மற்றும் கண்ணாடி பிற்றிங் விற்பனைக்குண்டு. (51522) (4.6.3)
தொடர்பு:075 980 1206/077 749 6564

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த, பூராட நட்சத்திரம், 12 இல் செவ்வாய், கிரகபாவம் 2, பிரபல வங்கியில் உதவி முகாமையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:077 555 7437 (51531) (4.6.3)

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் நிறுவனத்துக்கு கீழ்வரும் பணி யாளர்கள் தேவை.
1) சாரதி (A&Dசாரதி அனுமதிப் பத்திரம் உள்ள வர்கள் மட்டும்)
2) கூலித் தொழிலாளர்
தொடர்புகளுக்கு : (51534) (7.3)
இல. 368B, முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில்
முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி ர.குகவேணி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சந்திரவதனி வரதகுமார சர்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
**பணிமனை - யாழ்ப்பாணம்.**

(C/15627)(7.3)

# முதலாம் ஆண்டில் எம் முதல்வருக்கு அஞ்சலித்தோம்

மண்ணில் வித்தாக 15.09.1941

விண்ணில் முத்தாக 11.09.2013



(51292)(12.3.0)

## அமரர் சண்முகம் ஏகாம்பரநாதன் J.P

மண்ணில் உம் மனையாளிங்கே தனியாகத் தவித்திருக்க
மகளுடன் மருமகனும் பேரர்களும் மனதால் வாட
விண்ணிற்கு ஏன் சென்றீரையா? விழுந்து நாம் துடிக்கின்றோம்
ஓடி ஓடி ஒடையம்பதியானுக்கும் ஊருக்கும் உழைத்த
உத்தமரே! உங்களைப்பிரிந்து ஓராண்டு ஆயிற்றோ?
ஓராண்டென்ன எம் உயிர் இந்த மண்ணிலிருக்கும்வரை
மறப்போமா? உங்கள் நினைவை மணியே எம் குல விளக்கே!

கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு.

**மனைவி,
மகள், மருமகன்,
பேரர்கள்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
## மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், யா/புனித மரியாள் வித்தியாலயம்)

**மண்ணகத்தே 20.01.1951** **விண்ணகத்தே 01.08.2014**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"


கடந்த 01.08.2014 இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரும் பாசமிகு தந்தையும் ஆகிய அமரர் மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் நோயுற்றிருந்த காலங்களில் வைத்திய உதவிகள், ஆலோசனைகள் வழங்கிய வைத்தியர்களுக்கும் அந்நாள்களில் அன்னாருக்கு ஆன்ம வலுவூட்டி திடப்படுத்திய அருட் தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும் மேலும் அன்னாரது இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், வங்கி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், யாழ்.கல்வி வலய பணிமனை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், மல்ர்வளையம் சாத்தியோருக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், எமது அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/15609)(7.6.3)

இல. 116/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 9208

குடும்பத்தினர்

# கற்கள் குவிக்கப்பட்டும் வீதியின் புனரமைப்பு ஆரம்பிக்கவில்லை



கொழும்புத்துறை.ஓக.31

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியின் புனரமைப்புக்காக வீதியோரங்களில் நீண்ட காலமாக கற்கள் குவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

குறித்த வீதி மிகவும் சேதமடைந்துள்ள நிலையில் காணப்படுகிறது. இந்த நிலையில் ஒருபுறம் கற்குவியல்களும் மறுபுறம் வீதியின் குண்டும் குழிகளும் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுவதாக வீதியால் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பிக்கவிருக்கும் மழை காலத்துக்கு முன்னர் குறித்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

# மரண அறிவித்தல்

## குருநாதன் சத்தியசீலன்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதன் சத்தியசீலன் 26.08.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதன்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசாத்தி (கோப்பாய் தெற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், கமலன், மேவ்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நல்லம்மா, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராசாத்தி மற்றும் பாக்கியம், நாகேஸ்வரி, சின்னத்தம்பி, மகாலிங்கம், காலஞ்சென்ற [illegible] மற்றும் [illegible] ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசா, காலஞ்சென்ற கந்தையா மற்றும் பொன்ராசா, சுப்பிரமணியம், வரதராஜா, றெஜீனா, சின்னக்கிளி, காலஞ்சென்ற அரியமலர் மற்றும் கிறீஸ்வரி, காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் இந்திரராஜா (ஜேர்மனி), புவனேஸ்ராஜா (சுவிஸ்), லலிதாதேவி (இலங்கை), கலாதேவி (சுவிஸ்), தங்கராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தி (இலங்கை), ஜெயமணி (ஜேர்மனி), ஜெனிதா (சுவிஸ்), இரவீந்திரநாதன் (இலங்கை), ரங்கநாதன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நாளை (01.09.2014) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு. (51537) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# காணியில் புகுந்து கலாட்டா செய்த நபருக்கு மறியல்

தென்மராட்சி, ஓக.31

நாவற்குழி தச்சன் தோப்புப் பகுதியில் அத்துமீறி காணியில் நுழைந்து கற்கள், போத்தல்களால் வீசி கூரை ஓடுகளையும் கொட்டன்களால் தாக்கி வேலித் தகரங்களையும் சேதப்படுத்திய 54 வயது நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தர விட்டார்.

சாவகச்சேரி பொலிஸார் கடந்த வியாழனன்று இந்த நபரை நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (ஓ-9)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை ஜெயராசா



நவாலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயராசா நேற்று (30.08.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- அழகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -சின்னம்மா தம்பதியரின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், செல்வராணி, சதானந்தரூபவதி, காலஞ்சென்ற சிவம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தங்கராசா- மற்றும் செல்வராணி-காலஞ்சென்ற ஜெகநாதராசா, ஜெகதீஸ்வரன்- சரஸ்வதி, மலர்தேவி- அருணாசலம், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் வத்சலா -குணதீசன் ஆகியோரின் மைத்துனரும், சிரோமி, சியாமழி, சுவேதா, ஆரணி ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2014) திங்கட்கிழமை அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் எருளன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(51543)(3.4)

தகவல்:
**மனைவி.**

# சிவபுரத்துக்கு விரைவில் மின்சாரம்

பரந்தன், ஓக.31

பரந்தன் - சிவபுரம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மின்கம்பங்கள் நடப்பட்டுமின்வயர்பொருத்தப்பட்ட நிலையில் வீடுகளுக்கு மின் இணைப்பு வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

மின்சார சபையினால் வீடுகளுக்கான மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டவுடன் சிவபுரத்துக்கான மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-426)

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பேட் எட்வீனம்மா



**தோற்றம் 16.10.1946** **மறைவு 31.08.1989**

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ. 14:8)

நீயில்லா இவ்வுலகில் வாழும் உம் உறவுகளால்
உம்மைமறக்க முடியாமல் தவிக்கின்றோம்
நித்தம் குளிக்கின்றோம் கண்ணீரில்
25 ஆண்டுகள் சென்றும் உம்மைப் பிரிந்து உறங்கவில்லை
எம் கண்கள் உயிர் உடலில் உள்ளவரை
உம் உருவம் இருக்கும் எம்மனத்திரையில்
ஆலமரமம்மா நீங்கள் உம் விழுதுகள் நாங்கள்
வாழ வளர வழி தெரியாமல் தவிப்போம் என
எம் நிலை தெரிந்தும் எம்மைத்தவிக்க
விட்டுவிட்டு சென்றுவிட்டீர்கள்.

அன்னை தந்தைக்கு அன்பு மகளாய் உடன்பிறப்புகளுக்கு வழிகாட்டும் சகோதரியாய் கணவனுக்கு அன்பு மனைவியாய் நல் ஆசானாய் பிள்ளைகளுக்கு நல் அன்னையாய் தெய்வமாய் இருந்தீர்கள். கடல் உணவு வியாபாரத்தில் பல களம்கண்டு வீறுநடை போட்டு வெற்றிகண்டு நல்லதோர் ஆசானாய் ஆனாய். உள்ளத்து உணர்வு துயர்நிலை கண்டு துடிக்கும் கருணையின் உருவமே! உன்னால் வாழ்வு பெற்றோர் எண்ணிலடங்கா: உம் பிள்ளைகள் உடன்பிறப்புக்கள் உறவுகள் நாம் தவிக்கின்றோம்.

நாவாந்துறை புனி. நீக்கிலார் ஆலயத்தில் நாளை (01.09.2014) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலியில் கலந்து தேநீர் உபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டு நிற்கின்றோம்.

(51539)(7.3)

கடற்கரை வீதி, நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
அன்ரன் ஆன்றுட்

## வேலை வாய்ப்பு

தனியார் துறைமுகத்தில் கப்பல் புனர் நிர்மாணத் துறையில் சாதாரண ஊழியர்/வெல்டர்/தச்சர் தனியார் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர் காகோ/லொன்றி போன்ற பிரிவுக்கு 18-50 வயது ஆள்கள் தேவை. சம்பளம் 18,000/=, 32,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகைதரும் நாளிலேயே வேலை வாய்ப்பு. (48984) (7.3)

மேலதிக விவரங்களுக்கு :

**077 683 8231, 077 111 6770**

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு - தோட்டம் விற்பனைக்குண்டு

கைதடிமேற்கு, கைதடி (APC கமநலசேவை றோட்டில்) மானிப்பாய் றோட்டில், வீட்டுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அத்துடன் கைதடி தேற்கு, கைதடி (வைரவர் கோயிலடி, கைதடி சந்தி) இல் 10 பரப்பு தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு.

(51546) (12.3) தொடர்பு: **021 222 5290**

## விற்பனைக்கு

நல்லின ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு.

(51528) (12.5.6) தொடர்பு: **078 610 3174**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **021 222 8345** (T/15628) (4.6.3)

## காணிகள் விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்தி லிருந்து 100m தூரத்தில் A9 வீதியில் காணி கள் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: **077 460 5329** (51547)

## வேலையாள்கள் தேவை

மீசாலைப் பகுதியில் இயங்கி வரும் மிக்சர் தொழிலகத்துக்கு பெண் வேலையாள்கள் உடன் தேவைப்படுகின்றனர்.
(அனுபவமிக்கவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு: **078 719 6508** (47261) (4.6.3)

SPECTRUM Human Capital Development


University of Mysore

Edinburgh Napier UNIVERSITY

## செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில்

விஞ்ஞான கல்வியின் முன்னோடியான Spectrum Institute of Science & Technology அதன் துணை பல்கலைக்கழகங்களுடன் யாழ் நகரில் அதன் கிளையை ஆரம்பிக்கவுள்ளது.

- முழுப்பட்டப்படிப்பையும் இலங்கையிலேயே பூர்த்தி செய்யலாம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்புக்கள் BA, BSc ,BSc Hons தகமைகளை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம்.
- Biomedical Science. Biotechnology, Biochemistry, Microbiology, Chemistry, Botany, Food Science, Maths, Statistics, Computer Science, Physics, Psychology, Sociology, Criminology, English Literature, Political Science & Journalism.



**SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY**

218 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல்களுக்கு-

(C/15885)(7.3)

www.spectrumcampus.net | Tel : 0772278927 / 0777499494 / 0774549040

## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

(Opposite Jaffna Teaching Hospital)



**Platinum** 10.30am, 2.30pm, 6.30pm



**Silver** 10.15am, 2.15pm, 6.15pm



**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு
# FOREIGN JOB VACANCIES

## ஐரோப்பிய நாடான றொமானியாவில்



தொழிற்சாலை வேலையாள்



தோட்ட தொழிலாளி



ஹோட்டல் வேலையாள்கள்

| தொழில் நிலை | அளவு | சம்பளம் (யூரோ) | சம்பளம் (இல.ரூபாவில்) |
|---|---|---|---|
| பொது வேலையாள் ஹோட்டல் ஊழியர் | 25 | 850- 1000 | 153,000-180,000 |
| பொது வேலையாள் தொழிற்சாலை ஊழியர் | 25 | 850- 1000 | 153,000-180,000 |
| பொது வேலையாள் தோட்ட ஊழியர் | 25 | 850- 1000 | 153,000-180,000 |

**நிபந்தனைகள்**

| | | | |
|---|---|---|---|
| கம்பனி | ஹோட்டல் - தொழிற்சாலை-தோட்டப்பகுதி | காப்புறுதி | வழங்கப்படும் |
| மேலதிக நேரம் | வேலை செய்தால் மேலதிகமாக ஊதியம் வழங்கப்படும் | ஒப்பந்தகாலம் | 2 வருடம் |
| உணவு | இலவசம் | வேலைநேரம் | 8 மணித்தியாலம் |
| தங்குமிடம் | வழங்கப்படும் | வேலை நாள்கள் | 6 நாள்கள் |
| வைத்தியம் | வழங்கப்படும் | ஓய்வுநாள் | 1 நாள் ஓய்வு |
| போக்குவரத்து | வழங்கப்படும் | ரிக்கற் | இருவழி பயணத்துக்கும் வழங்கப்படும். |

சகல நிபந்தனைகளும் ஐரோப்பிய யூனியன் நாட்டு சட்டத்திட்டங்களுக்கமையும்

**AL-QAREEM AGENCY (PVT) LTD**
FOREIGN EMPLOYMENT AGENT
NO 143, GRANDPASS ROAD, COLOMBO 14
EMAIL: alqareemagency@sltnet.lk

SLBFE LIC: 555 SLBFE APPROVAL NO : AL/555/18/14 EXCELLENCE AWARD

## பெற்றோர்களே ஆசிரியர்களே

New Era Academy (London) கற்கை நெறிகளான
1. Teacher Training Programme International School Teachers,English Teachers, A/L பரீட்சைக்குத் தோற்றியோருக்கான கற்கை நெறி.
2. International Elocution Classes 3 வயது தொடக்கம் கற்க முடியும்.

**ஆரம்பம் : 06.09.2014**

(உங்களுக்கு அருகில் உள்ள கற்கை நிலையங்களில் கற்க முடியும்)
மேலதிக தகவல் : இல. 18, றக்கா வீதி, சுண்டுக்குளி.
(51540) (7.3) T.P: 077 211 6733



**UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...**

## வங்கியில் பணவைப்பு

**Saving book, Fixed Deposit, Statement**
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

**Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...**

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

**ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்**

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

**077-7711905**

# வலுவான பொறிமுறை உடன் தேவை

## மன்னிப்புச் சபை வலியுறுத்து

இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானவர்களைக் கண்டுபிடிப்பதற்கான வலுவான பொறிமுறை ஒன்று உடனடியாகத் தேவை என்று வலியுறுத்தியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநர் ரிச்சர்ட் பெனாட், அதேபோன்று பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் ஐ.ஆர்.ஐ.என் செய்திச் சேவைக்கு இந்தத் தகவலை அவர் தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கை அரசு பல வருடங்களாக பொறுப்புக்கூறல் விடயத்தில் தாமதப்படுத்தும் தந்திரோபாயங் களைப் பின்பற்றி வருகிறது. அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவ தற்கும் தவறியுள்ளது. இவற்றைக் கருத்தில் எடுக்கும்போது, இலங்கை அரசு தண்டனையிலிருந்து தான் தப்பிக் கொள்ள நினைக்கும் அதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் பின் நிற்கிறது என்பது புலனாகிறது.

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனாலும் அங்கு இரண்டு தரப்புக்களாலும் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்க ளுக்கு இன்னும்நீதிகிடைக்கவில்லை. ஆயுத மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு உண்மையான நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அனுமதிப்பதில்லை என்ற நிலைப் பாட்டை இலங்கை அதிகாரிகள் பின்பற்றி வருகின்றனர்.

எனவே, இலங்கையில் காணாமற்போனோரைத் தேடும் நடவடிக்கையும் நீதி வழங்குதற்கான வலுவான பொறிமுறையும், ஒரே நேரத்தில் அவசியமாகவுள்ளது. இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானவர்களை கண்டுபிடிப்பதற்கான வலுவான பொறிமுறை உடனடியாக தேவை. அதேபோன்று பலவந்தமாக காணமற்போகச் செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம் - என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## தொடர்ச்சிகள்

### கிளிநொச்சி

குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் ஆவர். மற்றொருவர் விநாயகபுரத்தைச் சேர்ந்த கணேஸ் துஷாந்தினி (வயது - 16) ஆவார்.

பாலசரவணபவன் தட்சாயினி என்ற சிறுமியே குளத்தில் குளித்துக்கொண்டிருந்தபோது முதலில் நீரில் மூழ்கியுள்ளார். அவர் மூழ்குவதையடுத்து அவரைக் காப்பாற்ற முற்பட்ட வேளையிலேயே மற்றைய இரு சிறுமிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் நீரில் மூழ்குவதை சற்று தூரத்தில் இருந்த அவர்களின் சிறிய தாயார் ஒருவர் கண்டு அவலக் குரல் எழுப்பியதையடுத்தே அங்கு அயலவர்கள் திரண்டனர். உடனடியாக அவர்கள் மீட்பு நடவடிக்கையில் இறங்கிய போதும் சிறுமிகளை உயிருடன் காப்பாற்ற முடியவில்லை.

இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டு தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த குளத்தில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ள போதும் குளத்தில் உள்ள குழியில் இருந்த தண்ணீரில் இந்தச் சிறுமிகள் குளிக்கச் சென்ற போதே சேற்றில் புதையுண்டு மூழ்கியதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

(த-18,55,101,426)

### வவுனியாவில்

வழங்கவில்லை. இதனால் சுமார் 30 நிமிடங்கள் வரை ஏ - 9 வீதியில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் தமது மனுவை காணாமற்போனோரின் உறவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவிடம் கையளித்து அவர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் பின்னர் வவுனியா பஸ் நிலையத்துக்குச் சென்ற காணாமற்போனோரின் உறவுகள், பொதுமக்கள் மற் றும் தமிழ்க் கட்சியினர் அங்கு 30 நிமிடங்கள் வரை நின்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்திப் போராட்டம் நடத்தினர்.

எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் உறவுகள் எங்கே? அரசே பதில் சொல் என்ற தொனிப்பொருளில் காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் இணையம் பொதுக் கூட்டத்தையும், ஜனநாயகப் போராட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தது.

காலை 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஆரம்பமானது. இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமது உறவுகளைத் தொலைத்த மூவின மக்களும் கலந்து கொண்டு கண்ணீர்மல்க அகவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பிர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரும், வடக்கு மாகாண அமைச்சர்களான பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம் ஆகியோரும், இறுதிப் போரில் படையினரிடம் சரணடைந்து காணாமற்போன விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரின் மனைவி அனந்தி சசிதரன் உட்பட வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், கூட்டமைப் பின் உள்ளூராட்சி சபைக ளின் உறுப்பினர்கள், ஜன நாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலாளர் சி.பாஸ்கரா ஆகியோரும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழுவினர், காணாமற்போனோ ரைத் தேடியறியும் குழுவினர் மற்றும் காணாமற்போனோரின் உறவுகள், பொது மக்கள், மதகுருமார்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்தி பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டு அதனை ஜனாதிபதிக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு நிறைவடைந்த பொதுக்கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான அறிக்கையை வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகளிடம் கையளிக்க மாவட்ட செயல கம் நோக்கி ஆர்ப்பாட்டப் பேர ணியாகக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் சென்றனர். இவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டமாக செல்லக்கூடாது என்று பொலிஸார் பணித்ததால் தாம் தனித் தனியே சென்று அரச செயலகத்தில் மனுவைக் கையளிக்கின்றோம் என்று கூறிய போதும் பொலிஸார் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் 2.30 மணி வரை ஏ - 9 வீதியில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது.

இந்த நிலையில் தமது மனுவை காணாமற்போனோரின் உறவுகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உருப்பினருமான மாவை சேனாதிராசாவிடம் கையளித்து அவர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் பின்னர் வவுனியா பஸ் நிலையத்திற்குச் சென்ற காணாமற்போனோரின் உறவுகள், பொதுமக்கள் மற்றும் தமிழ்க் கட்சியினர் அங்கு 30 நிமிடங்கள் வரை நின்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்திப் போராட்டம் நடத்தினர். (த)

### ஐ.நா.

கோரிக்கை விடுத்துள்ளது.

பலவந்தமாக காணாமற்போகச்செய்யப்பட்டோர் தொடர் பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்கள் அச்சுறுத்தப் படுவது மற்றும் பழிவாங்கப் படுவது குறித்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இலங்கை அரசுக்கு 4 கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்ட குழு கவலை வெளியிட்டுள்ளது.

அவற்றில் 2 கடிதங்களுக்குப் பதில ளித்ததற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ள குழு, பிரகடனத்தின் 13 ஆவது பிரிவின்படி விசாரணைகளில் சம்பந் தப்பட்ட அனைவரும் - முறைப்பாடு செய்தவர்கள், சாட்சிகள், விசாரணையை மேற்கொள்பவர்கள் - துன்புறுத்தல்கள், மிரட்டல்கள், பழிவாங்கப் படுதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் நினைவுபடுத்தியுள்ளது.

பெருமளவு சம்பவங்கள் தொடர்பாக இலங்கை பதிலளித்துள்ளதை பாராட்டியுள்ள ஐ.நா. குழு, இலங்கைக்கான பயணம் மிகுதியாகவுள்ள சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு உதவியாக அமையும் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன், 2006 இல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி கோரி விடுத்த வேண்டுகோளுக்கு இன்னமும் சாதகமான பதில் கிடைக்காததை சுட்டிக்காட்டியுள்ளதுடன், சாதகமாக பதில் விரைவில் கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

### இந்து

பெறவுள்ள இந்தப் போராட்டத்துக்கு சைவ மகா சபை, இந்துமா மன்றம்,சைவ பரிபாலன சபை ஆகிய இந்து சமய அமைப்புக்களும் இணைந்து ஆதரவு வழங்கவுள்ளன.

கைதடிச் சந்தியில் இன்று காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்தப் போராட் டம் தொடர்பில் அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் க.சச்சிதானந்தம் தெரி விக்கையில்,

பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆலய வழி பாட்டு முறைகளில் சரியை, கிரியை, யோகம்,ஞானம் ஆகிய நான்கு வழிபாட்டு முறைகளே இந்து சமயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. உயிர்ப் பலி கொடுக்குமாறு கூறப்பட வில்லை. நாம் தற்போது 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனித னைக் கூட நர பலி கொடுத்தார்கள். குழந்தைகள், பெண்கள் என பலி கொடுக் கப்பட்ட அநாகரிகமான காலத்தைத் தாண்டி நாகரிகமான காலத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பிரதேச சபைகளால் ஆலயங்களில் மிருக பலியை நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. இறைச்சிக்காக ஆலயங்களைக் கொல்களங்களாக மாற்றுகிறார்கள். நாகரிகமான பண்பாடுகளுக்குச் சாபக்கேட்டை ஏற்படுத்த இந்தச் செயற்பாடுகளை ஆல யங்களில் மேற்கொள்கிறார்கள்.

இந்தியாவில் பல மாநிலங்களில் மிருகபலிக்கு எதிரான சட்டம் இருக்கிறது. ஆனால் இலங்கையில் அவ்வாறான சட்டம் இல்லை. எனவே இலங்கை அரசும் அவ்வாறான ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதை வலியுறுத்தி பொதுமக்களிடம் கையெழுத்து பெறப்படவுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் மிருசுவில், மட்டுவில், வரணி, கைதடி, நுணாவில், எழுதுமட்டுவாழ் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் மிருக பலி நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார்.

கடந்த ஜூன் மாதம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் முன்பாக மிருகபலியை நிறுத்தக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் அதையும் மீறி அந்தப் பகுதியில் பிரசித்தமான இரு ஆலயங்களில் மிருக பலி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-14-7)

### டில்லியின்

மையிலான அரசின் அழைப்பை ஏற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வாரம் இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குப் பயணமாகியிருந்தனர். கடந்த 22 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது, தற்போது பதவி ஏற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசின், இலங்கை தொடர்பான கொள்கையில் மாற்றம் வேண்டும் என்று நேரடியாக வலியுறுத்தப்பட்டதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இனப்பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு என்பவற்றிலிருந்து தமிழ் மக்களுக்கு விடிவு தேவை. இந்த விடுதலைக்கான விடயத்தில் இலங்கை எவ்வாறு நடந்து கொண்டது என்ற அனுபவம் எங்களுக்கு இருக்கின்றது.

அதிலும் இலங்கை - இந்திய ஒப்பந்த விடயத்தில் இலங்கை அரசு எவ்வாறு நடந்தது, நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்த்தாலே தெரியும். வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரித்தது. வடக்கு மாகாணத்துக்கு அதிகாரங்களையும் வழங்கவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இலங்கை அரசு உதாசீனம் செய்கின்றது.

இவ்வாறானதொரு நிலை யில் டில்லி இன்னமும் 13 ஆவது திருத்தத்தில்தான் நின்று கொண்டிருக்கின்றது. 13 ஆவது திருத்தம் எங்கள் பிரச்சினையை என்றும் முழுமையாகத் தீர்க்கப் போவ தில்லை. தமிழருக்கான விடுதலை தேவையெனில், இந்த விடயத்தில் டில்லியின் கொள் கையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

அதைத்தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் சுட்டிக்காட்டினோம். இலங்கை தொடர்பான விடயத்தில் கொள்கை மாற்றம் ஏற்படவேண்டும் என்பதைத் தான் நாம் எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டோம் - என்றார்.

இதேவேளை, கடந்த காங்கிரஸ் ஆட்சியில் கடைப் பிடித்த அதே மென்மையான போக்குதான் இன்றைய பா.ஜ.க. ஆட்சியிலும் கடைப் பிடிக்கப்படுகின்றது. பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை.

இலங்கை அரசுக்கு, கடந்த காங்கிரஸ் அரசு என்ன பதிலைச் சொன்னார்களோ, அதே பதிலைத்தான் இன்றைய பா.ஜ.க. அரசும் சொல்கின்றது. இந்த அணுகுமுறையில் மாற்றம் வேண்டும். இது தான் எங்களின் கோரிக்கை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தாக ஜூனியர் விகடன் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### ராமேஸ்வரம்

மீன்பிடிக்கச் செல்வது என இராமேஸ்வரம் துறைமுகத்தில் நேற்று நடைபெற்ற மீனவர் கூட்டமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற பேச்சில் படகு கள் விடுதலை செய்யப்படும் என நம்பி இருந்ததாகவும், ஆனால் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் குற்றம் சுமத்தி யுள்ள மீனவர்கள், உடனடியா கப் படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் படகு கள் சேதம் அடையும் நிலை ஏற்படும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

டில்லியில் நடைபெற்ற பேச்சின் படி அடுத்த கட்டப் பேச்சு கொழும்பில் நடைபெற உள்ளதாக அறிகிறோம். ஆகவே இனி நடைபெறவுள்ள பேச்சிலாவது நிரந்தரத் தீர்வு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், 38 நாள் வேலை . நிறுத்தப் போராட்டத்தால் தங்களின் வாழ்வாதாரம் மிகவும் நலிவடைந்துள்ளதோடு மீன் பிடித் தொழில் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (த-14)

### உருவாகிறது

தில் ஊர்வலமாக பலாலி வீதி வழியாக உரும்பிராய் சந்தியை வந்தடைந்தது. அங்கிருந்து உரும்பிராய்- மருதனார்மடம் வீதி வழியாக வந்து காங்கேசன்துறை வீதியை அடைந்து அங்கிருந்து மாவிட்ட புரம் சென்று பின்னர் கீரி மலையை பிற்பகல் 1.30 மணியளவில் அடைந்தது.

கீரிமலையில் அடியவர்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் கடலுக்குள் விநாய கர் சிலை எடுத்துச் செல்லப்பட்டு நீருடன் கரைக்கப்பட்டது.

இந்தியாவில் ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு கடல்கள், ஆறுகளில் பூசை வழிபாடுகளுடன் விநாயகர் சிலை கரைக்கப்பட்டு வருகின்றபோதிலும் இலங்கையில் ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை கடலில் கரைக்கப்பட்டமை இதுவே முதற் தடவை என்று கூறப்படுகின்றது. (த-86)

# மருதம் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.31

மன்னார் பெரியமடு ஈச்சளவக்கை மருதம் விளையாட்டுக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் ஈச்சளவக்கை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நெடுக்கண்டல் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியும், தட்சணாமடு பளம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும், அடம்பன் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும், மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்றன.

முதலாவதாக நடைபெற்ற போட்டியில் நெடுக்கண்டல் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதம் ஈச்சளவக்கை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமான இந்த போட்டியில் இரண்டு அணியினரும் சமபலத்துடன் மோதிக் கொண்டனர். ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் ஈச்சளம் வக்கை மருதம் விளையாட்டுக்கழக அணி வீரன் விஜயன் தனக்கு கிடைந்த சந்தாப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. தமது அணிக்கான கோலினை அடிப்பதற்காக நெடுக்கண்டல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அவர்களால் ஒரு கோலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது ஈச்சளவக்கை மருதம் விளையாட்டக்கழக அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருத்தது.

இடைவேள்ளயின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. நெடுக்கண்டல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியினர் எவ்வாறயினும் தமது அணிக்காக கோல் ஒன்றை போட்டு ஆட்டத்தை சமப்படுத்தி விட வேண்டும் என்ற நோக்கத்துடன் எதிர் அணியினரின் கோல்ப்பரப்பினை முற்றுகையிட்டனர். இதன் போது நெடுக்கண்டல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் சதீஸ்சன் தனக்கு கிடைத்த பந்தினை சரியான முறையில் நகர்த்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் நெடுக்கண்டல் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் அச்சம்குளம் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தட்சணாமடு பளம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரு அணியினரும் சிறந்த முறையில் பந்துகளை தடுத்து ஆட ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் கோல்களைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் போட்டி சமனிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் தட்சணாமடு பளம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியும் அடம்பன் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன. இரு அணியினரும் சமபலத்துடன் முட்டி மோதிக் கொள்ள எந்த அணியினராலும் வெற்றிக்கான கோலினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் மிகவும் பரபரப்பாக நடைபெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டியின் வெற்றி தோல்வியினைத் தீரமானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் அடம்பன் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் மன்னார் பெரியகாமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் முதற்பாதி ஆட்டத்தில் தமது அணிக்கான கோல்களைப் பெற கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் முதற்பாதி ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரலும் கோல்களைப் பெறமுடியவில்லை. இதனால் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது ஆட்டத்தில் சில மாற்றங்களைப் மேற்கொண்டு மோதிக் கொண்டனர். இதன்போது மன்னார் பெரியகாமம் எவர்கிறீன் விளையாட்டுக்கழக அணி வீரன் டிலக்சன் தனது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க போட்டி விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. இதனை அடுத்து தனது ஆட்டத்தினை வேகப்படுத்திய மூன்றாம்பிட்டி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் கயுலன் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இரண்டு அணியினரும் தமது அணிக்காக மேலதிக கோல்களுக்காக எதிர் அணியினரின் கோல்ப்பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருத்தனர்.

இதன் போது மூன்றாம்பிட்டி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் உஷாந்தன் தனக்கு கிடைந்த பந்தினை சரியான முறையில் முன்நகர்த்திச் சென்று தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார்.

ஆட்ட நேர முடிவில் மூன்றாம் பிட்டி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்.ஒக்.31

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் சிறுவர்களுக்கான அடிப்படை உதைபந்தாட்ட பயிற்சி முகாம் எதிர் வரும் 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத் தில் இடம் பெறவுள்ளது.

இந்த சிறுவர்களுக்கான அடிப்படை உதைபந்தாட்டப் பயிற்சி முகாமில் 300 வீர வீராங்கனைகளும் 30 ஆசிரியர்களும் பங்குபற்றவுள்ளனர் என்றும், இவர்களுக்கான பயிற்சிகளை வின்சன் சுப்பிரமணியம் வழங்கவுள்ளார் என்றும் யாழ். உதைபந்தாட்ட லீக் கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ரி-23)



தேசியமட்டத்தில் உதைபந்தாட்டப் பயிற்சிகாகத் தெரிவு செய்யப்பட்டு ஜேர்மனி சென்று உலகின் முன்னணி உதைபந்து வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களிடம் பயிற்சி பெற்று நாடு திரும்பிய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் ஞா.அன்ரனிராஜ் மற்றும் கண்டி கிங்ஸ்வூத் மாணவன் மற்றும் அனுசரணை நிறுவன வியாபார முகாமையாளர் தாஷன மல்தெனிய ஆகியோரை விமான நிலையத்தில் வைத்து இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி அதிபர் ஏ.ஜே.யேசு தாஸ் அடிகளார், கல்லூரியின் கொழும்புக் கிளைத் தவிசாளரும் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபருமான அன்ரன் ஜெகநாதன் நிகழ்ச்சித்திட்டசெயலாளரும் மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா ஆகியோர் வரவேற்ற போது (ரி)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்.ஒக்.31

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை தொடரின் காலிறுதியாட்டங்கள் நடைபெறவுள்ளன. 4 மணிக்கு நடைபெறவிருக்கும் முதலாவது காலிறுதியாட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 5 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது காலிறுதி யாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள் ளது. (ரி-23)

★ ★ ★

யாழ்ப்பாணம்.ஒக்.31

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட வலி.வடக்கின் சமா என அழைக்கப்படும் முத்தரப்புத் தொடர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம், அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய மூன்று அணிகளும் பங்கேற்கவுள்ளன. (ரி-23)

## சம்பியனானது முல்லைத்தீவு

முல்லைத்தீவு அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான திணைக்களங்களுக்கு இடையில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி சம்பியனானது.

தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியை எதிர்த்து துணுக்காய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் 25:19, 19:25, 25:17, என்ற செற்கணக்கில் அணி வெற்றிபெற்து. (ரி-23)


## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை செல்வராசா



யாழ். மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Colombes வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராசா (29.08.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

